

# அளவெட்டி
# கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
# தலவரலாறு

64



RETIRED VICE PRINCIPAL

ஆக்கம்
திருமதி. கல்யாணி லோகநாதன்

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

# அளவெட்டி
# கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
# தலவரலாறு

ஆக்கம் திருமதி. கல்யாணி லோகநாதன்

முதற்பதிப்பு : 15-04-2002

சமர்ப்பணம் : கும்பழாவளைப் பிள்ளையார்

எழுதியவர் : கல்யாணி லோகநாதன்

அச்சுப் பதிப்பு : சண்முகா கம்பியூட்டர்ஸ் அன்ட் பிரின்டர்ஸ், வவுனியா. தொ.பே: 024-20240

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

விலை : ரூபா 100/-

இந்நூலின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி கும்பழாவளைப் பிள்ளையார் திருவிளக்குக்கான எண்ணெய்ச் செலவுக்கான அறக்கட்டளை நிதியில் சேர்க்கப்படும்.

பிரதிகள் பெற விரும்புவோர் ஆலயத் தர்மகர்த்தா சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

# அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தலவரலாறு




ஆக்கம்
திருமதி. கல்யாணி லோகநாதன்

உ

# கும்பழாவளை ஆலய அந்தணப் பெருமக்கள் அருளிய

## ஆசியுரை

ஆண்டாண்டு காலமாக ஆன்மாக்கள் லயப்பட்டு ஆன்ம ஈடேற்றத்துக்காகவும் நல்லொழுக்கப் பயபக்தியான இகலோக வாழ்வுக்காகவும் நம் முன்னோர்களால் ஆக்குவிக்கப்பட்டவையே நமது ஆலயங்களாகும்.

இவ்வாலயங்கள் தோன்றுவதற்கு அங்கே புதுமையான கட்டிட அமைப்புக்களும் திருப்பணி வேலைகளும் நடைபெறுவதற்கு அவ்வூர் மக்களிடையே இறைவனால் நடாத்திக் காட்டிய அற்புத நிகழ்வுகளும் அம்மக்களின் அசைக்கமுடியாத பக்தியுமே காரணமாகும்.

இவ்வாறான அற்புதங்கள் நிறைந்த கோயில்கள் பல இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ளன. அவற்றுக்குரிய புராண வரலாறுகளும், புராண பாடல்களும் உள்ளன. அவையாவும் அக்கோவில்களுக்கு வரலாற்றுப் பொக்கிஷமாக விளங்குகின்றன.

இத்தகைய பெரும் அற்புதங்களும் மூர்த்தி, தலம், தீர்த்தம் பொருந்திய பிரசித்தக்ஷேத்திரமாகவும் விளங்கும் அளவையூர் கும்பழாவளை விநாயகப் பெருமானுக்கு ஓர் ஆலய வரலாறு எழுதி வெளியிடுவது பெரும்புண்ணிய காரியமாகும். இவ்வரலாறு விநாயகப் பெருமான் பாரதம் எழுதியது போல் விரைவாக எழுதப்பட்டு நூலாக வெளிவருவது விநாயகரின் அருளேயாகும். இந்நூல் ஈரேழு உலகங்களிலும் பெருகி விநாயக பரத்துவம் பரவ வழிசெய்ய வேண்டும். இந்நூலாசிரியர் சகல கலைகளையும் கற்று சகல சம்பத்துக்களும் பெற்று கும்பழாவளை விநாயகர் அருளால் நீடூழிகாலம் வாழவேண்டும் என வாழ்த்தி அமைகின்றேன். அவ்வாறே எல்லோரும் எல்லாமும் பெற்றுச் சுகமாக வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

சர்வே ஜநா: சுகினோ பவந்து.

பிரமஸ்ரீ சோ. வெங்கடேஸ்வரக் குருக்களும் பிள்ளைகளும்
இ. விஸ்வேஸ்வரக் குருக்கள் (சந்திரன் ஐயர்)

உ



*அழகிய ஊராம் அளவையம்பதி வாழும்*

*அருள் சுரக்கும் நாயகனாம் கும்பழாவளை விநாயகனின்*

*அற்புதங்களோடு கோவில் மகிமைகள் தன்னையுமே*

*அன்பு பக்தியோடு பக்தர்கள் படித்து மகிழ்ந்திடவே*

*அரிய நூலாகவே மலர்ந்திடும் விநாயக வரலாறு மகத்துவத்தை*

*அறிஞராகிய ஆசிரியை கல்யாணி எழுதிடவே*

*அருமறைகள் ஓதிடும் அந்தணர்கள் தம் ஆசிகளுடன் வாழ்த்தும்*

*அளவை ஐங்கரனின் அருளோடு பெருகிடவே.*

14-07-93 சந்திரன் ஐயர்

> விநாயக என் கைகளாலோ, கால்களாலோ, காதுகளாலோ, கண்களாலோ, பேச்சாலோ, உடலாலோ, செயலாலோ, மனதாலோ என்னென்ன பிழைகள் செய்துள்ளேனோ, அவற்றை எல்லாம் பொறுத்தருள் வாயாக. உன் நாமம் எல்லார் மனத்திலும் உறைவதாக.
>
> -சங்கரர்

## அளவெட்டி கும்பாழாவளைப் பிள்ளையார்

# ஆலயத் தர்மகத்தா சபைத் தலைவர்

## பாராட்டுரை

அளவெட்டி கும்பாழாவளைப் பிள்ளையார் ஆலயம் வரலாற்றுப் பெருமை கொண்டது மாத்திரமன்றி மூர்த்தி விசேடம், தலவிசேடம், தீர்த்த விசேடம் கொண்டது. இதுவரை இவ்வாலய வரலாறு ஆவணவடிவில் வராத குறையினை திருமதி. லோகநாதன் கல்யாணி அவர்கள் முன்வந்து பூர்த்தி செய்து அழகான முறையில் அச்சேற்றி வெளியிடுவதை நாம் பாராட்டுகிறோம், மெச்சுகிறோம். வருங்காலச் சந்ததியினரும் பயன் பெறும் வகையில் பல பெரியார்களிடமும், ஆலய வெளியீடுகள் விபரங்களைப் பல சிரமங்களுக்கு மத்தியில் பெற்று அதனை ஒழுங்குபடுத்தி தமது செலவில் வெளியிடுகின்றார். அன்னாரது முயற்சி நன்றாக அமையட்டும். அவர் வாழ்வு சிறக்க பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். அவருக்கு எமது சபையின் பாராட்டுக்கள் உரியதாகுக.

1-2-2002

இங்ஙனம்
சோ.சிவப்பிரகாசம்
தலைவர்
தர்மகத்தா சபை

*இருள் இருளைப் போக்காது. ஒளியே இருளைப் போக்கும்*
*அஞ்ஞானத்தை விரட்டியடிப்பது அதற்கு எதிரிடையான ஞானமே ஆகும்.*
*-சங்கரர்*

**கும்பழாவளை தர்மகர்த்தா சபை முன்னாள்**

## கௌரவகாரியதரிசி திரு.ந.சிவபாதன்

**(B.A) அதிபர் அருணோதயக் கல்லூரி. அவர்கள் அளித்த**

# பாராட்டுரை

வரலாற்றுப் புகழ்மிக்க அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் வரலாற்றினைத் தொன்று தொட்டு ஆராய்ந்து, ஆழ்ந்த அறிவுடைய சான்றோர் பலரைச் சந்தித்து, அவர்களின் ஆற்றுப்படுத்தலின் கீழ் இவ்வரலாற்று நூலை செவ்வனே ஆக்கி வெளியிட முயன்ற திருமதி.கல்யாணி லோகநாதன் அவர்களின் முயற்சியையும், துணிவையும், ஆழ்ந்த அறிவையும், ஆழ்ந்த சமயப் பற்றினையும் நாம் மிக்க மகிழ்வுடன் பாராட்டுகின்றோம். திருமதி.கல்யாணி லோகநாதன் அவர்கள் இவ்வாலயத்தோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர். சமயப் பற்று மிக்கவர். சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவதில் வல்லவர். அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் வரலாற்றை இதுவரை எவரும் ஆராய்ந்து நூல்வடிவமாக வெளியிட முன்வரவில்லை. எனவே இவரது இம் முயற்சியைத் தொடர்ந்து மேலும் பலர் இவ்வாலயம் பற்றி வரலாற்றுச் சான்றுகளைக் கண்டறிவதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரியும் என நம்புகின்றோம்.

16.07.1993

கௌரவ காரியதரிசி<br>
தர்மகர்த்தா சபை,<br>
கும்பழாவளை விநாயகர் ஆலயம்,<br>
ந.சிவபாதன்<br>
அளவெட்டி.

ஸ்ரீ சந்திர மௌளீஸ்வராய நம

ஸ்ரீ சங்கர பகவத் பாதா சாரிய பரம்பரை

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீமடம் சமஸ்தானம் காஞ்சிபுரம்

# ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடாதிபதி அருளிய.

## ஸ்ரீ முகம்

மனித வாழ்வுக்கு இம்மை மறுமை என இரு கூறுபாடுகள் உள்ளன. அறம், பொருள், இன்பமாம் இம்மையும், வீடு பேறாம் மறுமையும் சீர் பெற அமையும் போதே இவ்வாழ்வு; பூரணத்துவம் பெற்றுப் பொலிகின்றது. இந்நிலை பெற உதவுவது தெய்வீக சம்பத்து எனப்போற்றப்படும் நற்குணங்களும் நல்லியல்புகளுமாம். இவை அமைந்து வளர்வதற்கு ஆதாரமாக அமைவது ஈச்வர பக்தி சுகுணநிலையில் அமையும் போதே இது நிலைபெற்று வளர்ந்து நற்பயன் விளைவிக்கின்றது. இந்தத்திடமான அனுபவத்திலே தான் ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாள் ஷண்மதங்களை ஸ்தாபித்தருளினார்கள். அவைகளில் ஒன்றாவது காணாபத்யம்.

விக்ன நிவாரணராகிய முதல் பூஜை பெறும் இவரையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டு ஆன்மானுபவம் பெறும் நிலையே இது. இவ்விநாயகரது அருள் பொங்கிப் பெருகும் திருத்தலமாக ஸ்ரீலங்காவில் விளங்கும் அளவெட்டி கும்பழாவளை ஸ்ரீமடத்தின் அனுக்கிரகத்தோடு ஸ்ரீசங்கரப் பிரதிஷ்டையும் நடந்து அன்பர்களுக்கு அருட்பெருக்களித்து வரும் கும்பழாவளை விநாயகப் பெருமானின் கோவிலின் நீண்ட கால வரலாற்றைத் தொகுத்தளிக்கும் தலவரலாற்றின் கையேடு கண்டு மகிழ்கின்றோம்.

ஈஸ்வர பக்தியுடன் ஆஸ்தீக வாழ்வினைப் பரம்பரைச் சொத்து ஆகப் பெற்றுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவரான திருமதி. கல்யாணி லோகநாதன் அவர்களால் யாத்தளிக்கப்பட்டுள்ளது இந்நூல்.

இவரது இம்முயற்சி மேன்மேலும் வளர்ந்து மருளில் மயங்கித் தவிக்கும் மானிட வர்க்கத்துக்கு அறவழி விளக்கிட ஆவன செய்வதாக அமைய ஸ்ரீ விநாயகப் பெருமானது பரிபூர்ண அருள் பொங்கிட ஆசீர்வதிக்கிறோம்.

3.10.1994 நாராயணஸ்ம்ருதி.

திருவண்ணாமலை ஆதீனம் குரு மகாசந்நிதானம்
அருள் நெறித் தந்தை
## தவத்திரு குன்றக்குடி அடிகளார் அருளிய

# அணிந்துரை

வட இலங்கை- யாழ்ப்பாணம் பகுதியில் செந்தமிழையும் சிவநெறியையும் போற்றி வளர்க்கும் அளவெட்டியில் எழுந்தருளியுள்ள அருள்தரு கும்பழாவளை விநாயகர் திருத்தல வரலாற்று நூலைப் படிக்கும் இனிய வாய்ப்பு கிடைத்தது. பாராட்டுக்குரிய சகோதரி திருமதி.கல்யாணி லோகநாதன் அவர்கள் இந்த வரலாற்று நூலை மிகவும் சிறப்பாக எழுதியுள்ளார். விநாயகர் வழிபாடு தோன்றி வளர்ந்த வரலாற்றையே மிகவும் சுருக்கமாக ஆனால் விளக்கமாக எழுதியுள்ளமை பாராட்டுதலுக்குரியது. விநாயகர் வழிபாடு உலகந்தழீஇயது என்று பல்வேறு உதாரணங்கள் மூலம் நூலாசிரியர் நிலைநாட்டியுள்ளமையை படிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. பௌத்தர்களும் கூட "கணதெய்யோ" என்ற திருநாமத்தில் கணபதியை வழிபடும் பாங்கு பற்றி எழுதியிருப்பது நூலாசிரியரின் பரந்துபட்ட ஆய்வறிவை வெளிப்படுத்துகிறது.

தலைமுறை தலைமுறையாகத் திருக்கோயில் வழிபாடு செய்யும் மரபு அன்றும் இன்றும் ஈழத்தில் நிலவுவது மனநிறைவைத் தரத்தக்க செய்தி.

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு என்ற வாழ்நிலைக்கு இந்த மரபு அரண் செய்யும்.

நூலாசிரியர் தனது மண்ணின் மணத்தை, புகழை, அதாவது அளவெட்டியின் சிறப்பை எடுத்துக் கூறத் தவறவில்லை. அது உண்மையும் கூட; வெறும் புகழ்ச்சியல்ல; சோழ அரசியின் சாபம் நீங்கிய வரலாறு உய்த்துணரத்தக்கவாறு நூலாசிரியர் அருமையாக எழுதியுள்ளார். வரலாற்றுக்குரிய சான்றுகளையும் ஆங்காங்கு எடுத்துக்காட்டியிருப்பது பயனுடைய முயற்சி.

பூசகர் கேட்புக்குச் செவ்விளநீர் தரமறுத்தவரின் செவ்விளநீர் மரம் ஒரு பக்கத்தில் பைங்காயாகக் காய்க்கவும் மறுபக்கத்தில் செங்காயாகக் காய்க்கவும் செய்த திருவிளையாடல் கவனத்துக்குரியது - ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

இத்திருக்கோயிலின் மற்ற மூர்த்தங்கள் அமைந்த வரலாற்றையும் சிறப்பாக எழுதியுள்ளார். அமைதிக்குணம் (சாத்வீக குணம்) முழுநிலா நாளில் (பௌர்ணமி நாளில்) வரும் என்ற நூலாசிரியரின் கருத்து சிந்தனைக்குரியது. கதிரொளி கும்பழாவளை விநாயகர் திருமேனியில் பட்டு ஒளியுடன் விளங்குவதை ஆன்மாக்களின் அறியாமை நீக்கத்திற்கு உவமித்துச் சொல்லும் இடம் "இன்றெனக் கருளி இருள்கடிந்து எழுகின்ற ஞாயிறே போன்று" என்ற அருள் வாக்கினை நினைவூட்டுகிறது.

நூலின் முடிவாகக் கும்பழாவளை விநாயகர் துதிப்பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளமை மிகவும் பயனுடையதாக இருக்கிறது. நாள் தோறும் ஓத முடியும் இத் தோத்திரப் பாடல்களில் ஒன்றில் இன்றைய உலகம் எப்படி இருக்கிறது என்று அப்பட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

*"வஞ்சனை பொய்கள் வளர்ந்து வருத்தும் இவ்வையகத்தில்*
*விஞ்சுங் களவுகட்காம நெருங்கி விதனிப்பதால்*
*அஞ்சலென்றாற்ற வொருதுணை நீயுன் னடைக்கலம் நான்*
*கஞ்ச மலர்ச்சுனை சேர்கும்பழாவளைக் காரணனே"*

வஞ்சனையும் பொய்யும் வளர்ந்து துயரத்தால் மக்கள் அவதியுறுகின்றனர். இந்த உலகத்திலும் அஞ்சலென்று அருள் செய்யும் கருணைப் பெருக்குடையவன் கும்பழாவளைக் காரணனாகிய விநாயகன் என்பது பாடற்கருத்து.

நாம் குறிப்பாக யாழ்குடா நாட்டு மக்கள் அமைதியும் சமாதானமும் பெற கும்பழாவளை விநாயகர் திருவடிகளைச் சிந்தனை செய்து பிரார்த்தனை செய்வோமாக.

நல்லதொரு தலவரலாற்றை எழுதி உதவிய சகோதரி திருமதி.கல்யாணி லோகநாதன் அவர்களுக்குப் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள

*இன்ப அன்பு.*

15.01.1993

அடிகள்.

### ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை
### சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி
### அவர்கள் அளித்த

# வாழ்த்துரை

அளவெட்டிவாழ், சைவமக்கள் பெரும்புண்ணிம் செய்தவர்கள். விநாயக வழிபாட்டை நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் மேற்கொள்ளும் பாக்கியம் கிடைத்தமைதான் இவர்களின் புண்ணிய விசேடமாகும். கும்பழாவளைப் பிள்ளையார் என்றால் அவர் எல்லார்க்கும் செல்லப்பிள்ளையார். கும்பிடுகிறவர்களைக் குறைவின்றிவாழ வைப்பார். இதனை அனுபவத்தில் கொண்ட ஒரு குடும்பம்தான் திரு.வேலுப்பிள்ளை குடும்பம். இவருடைய குடும்பத்தின் ஒளி விளக்காக விளங்குபவர்தான் திருமதி.கல்யாணி லோகநாதன் அவர்கள். இவருடைய பேச்சும் எழுத்தும் தெய்வசிந்தனையை வெளிப்படுத்துவனவாகும். இதனாலேதான் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய வரலாற்றை தன் ஆற்றலுக்கு ஏற்றபடி எழுதி வெளியிட்டுள்ளார். இத்திருக்கோயிலின் மேல் தான் கொண்ட அபிமானத்தின் காரணமாக இந்நூலை எழுதி வெளியிடுகின்றார். எனவே அருள்மிகு விநாயகப் பெருமான் திருவருள் பொலிய அனைத்தும் மங்கலமாக நிறைவேற வாழ்த்துவதோடு நூலாசிரியை கல்யாணியையும் பாராட்டி அமைகின்றேன்.

20-12-1993

தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி
தேவஸ்தானம், தெல்லிப்பழை.

> *உலகம் விருப்பு வெறுப்புக்களால் நிறைந்துள்ளது. அது ஒரு கனவுக்கொப்பாகும். அஞ்ஞானநிலையில் அது உண்மை போலத் தோன்றினாலும், ஞானவிழிப்பு ஏற்பட்டதும் அது பொய் என்பது உணரப்படும்.*
> *-சங்கரர்*

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளரும்,
முன்னாள் இராமநாதன் கல்லூரி அதிபருமாகிய
**திருமதி.மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் (B.A)**
அவர்கள் அளித்த

# வாழ்த்துரை

அறிஞர்கள் கலைஞர்கள் அந்தணப் பெருமக்கள் வாழ்ந்து நற்பணியாற்றி வருவதால் அளவெட்டி என்னும் ஊர் சிறப்புடன் விளங்குகிறது. கோயிலில்லா ஊரில் குடியிருப்பது ஏற்றதல்ல என்ற கருத்து அறிஞர்களால் வற்புறுத்தப்பட்டுள்ளது. பண்டைக் காலம் தொடக்கம் ஆலயங்களை மையமாக வைத்தே மக்கள் வாழ்க்கை அமைந்திருந்தது. சகல கலைகளின் வளர்ச்சிக்கும் ஆலயங்கள் உறுதுணையாக விளங்கின. அளவெட்டியில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல ஆலயங்கள் இருக்கின்றன. அங்கு பாடிப்பரவும் பக்தர்கள் நாள்தோறும் பணிசெய்ய வெவ்வினையை வேரோடு அறுக்கும் விநாயகப் பெருமான் எழுந்தருளியிருக்க கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தனிச்சிறப்புடன் விளங்குகின்றது. இந்த ஆலய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய அடியார்களுள் அமரர் மயில்வாகனம் பாராட்டப்பட வேண்டியவர் ஆவார்.

ஆலயத்தின் அமைப்பு அதன் சுற்றாடல் ஆலயத்தோடு தொடர்புடைய ஏனைய கட்டிடங்கள் என்பன எல்லாம் ஆலயத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. ஆலயத்திற்குத் தென்புறத்தே அமைந்துள்ள தீர்த்தக் கேணி மேலும் ஆலயத்திற்குப் புனிதத்தன்மையை ஏற்படுத்துகின்றது. ஆலயங்களின் வரலாறு வருங்காலச் சந்ததியினருக்கு பேணிப்பாதுகாப்பதற்கு வேண்டிய ஒன்று. கும்பழாவளைப்பிள்ளையார் கோவில் வரலாற்றை எனது மாணவியான திருமதி.கல்யாணி லோகநாதன் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அவர் சமய ஈடுபாடும் பக்தியும் சமய அறிவும் நிரம்பியவர். மேலும் சீரிய நெறிகளை வாழ்க்கையிற் கடைப்பிடிப்பதோடு ஒரு சிறந்த சமயப் பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்குகிறார்.அவரின் கன்னி முயற்சியாக இந்நூல் அமைகிறது.

கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலையும் அங்கு நடைபெறும் நித்திய நைமித்திக பூசைகள் பற்றியும் காலத்துக்குக் காலம் நடைபெற்ற திருப்பணிகள் பற்றியும் ஆலயத்தொண்டர்கள் ஆற்றும் அருஞ்சேவை பற்றியும் விபரமாக விளக்கியுள்ளார். இவ்வாலயம் ஏனைய ஆலயங்களுக்கு முன்மாதிரியாக விளங்குகின்றது. திருமதி.கல்யாணி லோகநாதனுடைய முயற்சியைப் பின்பற்றி தற்கால இளஞ்சந்ததியினர் ஆலயங்களைப்பற்றி எழுதி நூலாக வெளியிட சைவ நன்மக்கள் உற்சாகமளிக்க வேண்டும். அவருடைய சமயப்பணி சிறக்க விநாயகப் பெருமான் அருள்புரிவாராக.

புலவரகம்
மயிலிணி.
சுன்னாகம்.
20.9.93 ம.திருச்சிற்றம்பலம்.

*மணிவாசகர் கண்ட தேன்*

*1. தேனை ஆனெயக் கரும்பினின் தேறலை.*

*2.தேனைப் பாலைக் கன்னலின் தெளிவை.*

*3.தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து*

*4.தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்*

*5. தேனைப் பழச்சுவையாயினானை*

*6. கண்ணகத்தே நின்று கனிதருதேனே.*

*7.நெல்லிக் கனியைத் தேனைப் பாலை*

*8. தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்.*

மன்னார் மாவட்ட நீதிபதி

## திரு.மு.திருநாவுக்கரசு அவர்கள் அளித்த

# சிறப்புரை

எழில்மிகு ஈழமணித்திரு நாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் அழகுற அமைந்த ஆலயங்கள் பற்பல.

சிறப்புடன் பூசை சிறந்து மிக்கோங்கிட பன்னெடுங்காலமாய் பொலிவுடன் திகழும் ஆலயங்கள் தன்னை எண்ணிடல் அரிது. சிவனார் உறையும் திருத்தலங்களோ பற்பல. உமையவள் வீற்று உவந்தருள் புரியும் ஒப்பில்லா ஆலயங்கள் உள்ளதும் இங்குதான். கந்தவேள் உறையும் கவின்பெறு ஆலயங்களோ ஓர்புறம், விநாயகர் உறையும் விழுமிய ஆலயங்கள் மறுபுறம், வைரவர், வீரபத்திரர், காளி இப்படியாகப் பற்பல தெய்வங்கட்கு பகட்டான ஆலயம்கண்டு அகமகிழ்வு எய்தும் பக்தர்கள் இங்கே வதிவர். வான்தொட வனப்புறு கோபுர கோயில்கள், பரந்த வீதிகள், மணிநெடுந்தேர்கள் இப்படியாக ஆலயம் பல கண்டு அங்கு பூசையும் விழாக்களும் கண்டு பூரிப்பெய்துவர்.

இத்தனை சிறப்புறு மண்ணில் "அ" என்னும் முதலாம் எழுத்தைக் கொண்டு அழகுற அமைந்த, அணிபல சேர்ந்த சிறப்புறு ஊர் ஒன்று உண்டெனில் அவ்வூர் "அளவெட்டி" என்னும் ஊரே. பண்டைப் பெருமையும் பழந்தமிழ்ப் பண்பும் செந்தமிழ்ப் பற்றும் சிறப்புறு வளங்களும் கொண்ட குறைவில்லா நல்லூர் அளவெட்டி என்னும் அணி கொள் ஊரே.

இசையும், கலையும் இணைந்தே வளர்ந்திடும் இன்னிசைக் கானம் இசைத்திடும் கலைஞர், தவிலொடு நாதஸ்வரம் தந்திடும் கலைஞர், பண்ணிசைக் கலைஞர் கர்நாடக இசையில் கைவந்த கலைஞர்கள், நாடகம், நாட்டியம், கரகம், காவடி இத்தனை கலையும் இணைந்தே வளர்ந்திடும் நற்றமிழ்க் கிராமம் நலம்பெறும் அளவையூர். இக்கிராமத்தின் எல்லையைத் தாண்டாமலேயே நாட்பலசேர இந்திர விழாவினை நடத்தலாம். கும்பழாவளையான் கோயில் கொடியேற்றம் என்றால் அளவைக் கிராமம் மட்டுமன்றி அயற்கிராமங்கள் அனைத்துமே பூரிப்பெய்தும். இந்திய விற்பன்னர் இசையரங்கு ஒருபுறம், ஈழத்து வித்துவான்கள் மோதிநின்று

முழங்கிடும் நாதம் நாட்பல சென்றாலும் காதினில் ஒலிக்கும். இசைப்பெருங் கச்சேரிகள், இணையில்லாச் சதிர் என்னும் சிறப்புறு நடனங்கள், நூற்றுக்கும் மேலாக கனிதரும் வாழைக்குலைகளும் சிகரமும், சப்பறமும், ஆலயவீதியை அலங்கரித்திடவே, வாணவேடிக்கைகள் விண் வரை சென்று நம்மவர் நினைவை விண்ணவர்க்கும் நல்கும், இனிய ஊரின் நடுநாயகமாக நலம்பெற அமைந்து, வேண்டும் அடியவர்கள் வினைகளைக் களைந்திடும் விக்னவிநாயகர் கும்பழாவளையில் கோயில் கொண்டருளிய விநாயகர் என்பது ஊரும் உலகமும் உணர்ந்த நல்லுண்மையே.

இத்தனை புகழ்சேர் இனிய விநாயகனைப் பாடிப்பரவி பாட்டினில் பரவி ஆக்கிய பாக்கள் அநேகம் உண்டு. ஆனால் வரலாற்றை ஆய்ந்து ஆய்ந்து ஆக்கிய நூல் ஒன்றுகூட உருவாகவில்லை.

இக்குறைதன்னை இனிதே போக்கிட முன்முயற்சியாய் முனைந்த நங்கையாம் கல்யாணி லோகநாதனை வாயாரப்புகழ்வது விநாயகர் புகழை வியப்பது ஆகும்.

சரித்திரம், தத்துவம் சரிவர ஆய்ந்து அரியபடங்கள் ஆய்வுரை என இனிக்கும் தமிழில் இங்கிதமாகச் சுவைபடத்தந்துள்ளார் சுந்தரத் தமிழில். அனைத்து விநாயக பக்தரும் இந்நூலினைப் பெற்று அமைதியாகப் படித்து உணர்ந்து பூசையறையில் புனிதமாக வைத்து நாளும் பொழுதும் நன்கு இதைப்படித்து நலம்பெற விநாயகர் கழல் அடிபணிவாம்.

வாசல்வரை கூட்டி வந்தேன் உள்ளே செல்லுங்கள் உருக்கமாய் படியுங்கள் அவன் அருட் பெருமைகளை உணருங்கள், நீங்களும் அவன் அருளைப் பெறுங்கள்.

*10-12-1994* *மு.திருநாவுக்கரசு.*

*சொர்க்கத்தைப் பார்க்க வேண்டுமா? வழி சொல்கிறேன்*
*நீ வாழுகின்ற நரகத்தைச் சுத்தப்படுத்து, பார்க்கலாம்.*

# என்னுரை

"சொற்பதங்கள் கடந்த துரிய மெஞ்ஞான அற்புதம் நின்ற கற்பகக் களிறும், என்னுள்ளே இருந்து என்னை இயக்கிக்கொண்டிருப்வனும், என்குல தெய்வமும் அன்புத் தெய்வமுமாகிய கும்பழாவளை விநாயகப் பெருமான் கோயில் கொண்டருளியிருக்கும் தலவரலாற்றினையும், ஆலயச் சிறப்புக்களையும் நூல்வடிவில் எழுதுவதற்குத் திருவருள் கூட்டியுள்ளது.

ஆரம்பத்தில் இந்நூல் அச்சுப்பிரதியாக வெளிவர வேண்டும் என்ற நோக்கில் எழுதவில்லை. எனது ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இறுதியாண்டுத் தேர்வில் ஒப்படைக்க வேண்டிய ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையாகவே இவ்வரலாற்றைப் பல்வகையிலும் ஆராய்ந்து வரலாற்றுக் குறிப்புக்கள், பூர்வீக சரித்திரம் அற்புதங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களை இவ்வூர் அறிஞர்களிடமும், ஆலய பூசகர்களிடமும், பல பெரியோர்களிடமும் சென்று அவர்களின் தரவுகளையெல்லாம் எடுத்து எழுதினேன். விநாயகன் திருவுள்ளமோ என்னவோ நான் பயின்ற நெறி சமயம் என்றதாலும் ஆராய்ச்சிக் கட்டுரையாக எமது ஆலயத்தின் வரலாற்றையே எழுத வேண்டும் என்ற திருவருளின் உந்துதலாலும் எழுத முயன்றேன்.

இக்கட்டுரையை வாசித்துப் புள்ளியிட்ட விரிவுரையாளர் திருமதி.மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள் இதனை ஒரு ஆலய வரலாற்று நூலாக வெளியிட்டால் நன்று, அப்படிச் செய்தாலென்ன என்ற வினாவை என்னிடம் எழுப்பினார். அவரின் அந்த வினா தான் இன்று இந்நூல் வெளியாவதற்கு அடிப்படைக் காரணமாகும். இதற்கு இவ்வூர் பெரியோர்களும், அறிஞர்களும், ஆக்கமும் ஊக்கமும் தந்து தம்மாலான சகல கருத்துக்களையும் தந்து உதவினார்கள்.

வரலாற்றுக்குறிப்புகள் சேகரிக்கப்பட்டு அவை எதுவும் விடுபடாத வகையில் நூலை எழுதுவது என்பது பெருஞ்சுமையே. ஆயினும் ஒரு ஆலயத்தின் தலவரலாறும், மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பும் ஏட்டுருவில் அமைந்திருப்பது நிகழ்காலத்திற்கு மாத்திரமன்றி எதிர்காலத்துக்கும் அதன் பெருமையை விளங்க வைக்கும் என்ற ஆன்றோரின் கருத்துக்கமைய எம் ஆலயத்திற்கும் ஒரு வரலாறு இல்லாத குறையை நிவர்த்தி செய்ய

திருவருள் என்னைத் தூண்டி விட்டிருக்கிறது என்றே யான் எண்ணுகின்றேன். முழுமையாக இவ் ஆலய வரலாற்றை எழுத்தில் வடித்து நூலாகத் தரும் தகமையும் ஆய்வும் அருந்திறனும் அடியேனுக்கு இல்லை என்பதை கூறிக்கொள்கின்றேன். என் சிந்தனைக்கும் சிற்றறிவுக்கும் எட்டியவரை சென்று என் குல தெய்வத்தின் மாண்பினை ஒரு சிறு நூலாக, பண்டைய வரலாற்றிற்கும், இனி எழுத உள்ள பெருமக்களின் சிந்தனைக்கும் ஒரு சிறு பாலமாக இந்நூலை ஆக்கினேன்.

எம் பெருமான் கணநாயகன் பிரணவரூபன் மீது கொண்ட ஆரா அன்பினால் இந்நூலை எழுதுகின்றேனே தவிர கல்வி கேள்விகளில் ஒன்றுக்கும் பற்றாத யான் ஒரு நூல் ஆசிரியனாக என் பெயரும் பொறிக்கப்பட வேண்டும் என்பதற்காக எழுதவில்லை. பற்பல பண்டிதர்கள், பாவலர்கள், சமய ஞானமிகு சான்றோர்கள் கையில் இந்நூல் சென்றடையலாம். ஆகையினால் இந்நூலில் வரும் குற்றங்களைக் குணமெனச் சான்றோர் கொள்வர் என்பது துணிபு. இவ்வாறு குறைகளை நீக்கி நிறைவாகக் கொள்ள வேண்டுமென நயமாக வேண்டி அமைவதோடு இந்நூலில் தவறவிடப்பட்ட விடயங்களையும் பிழைகளையும் எடுத்துக் காட்டின் அடுத்த பதிப்பில் அவற்றை நிவர்த்தி செய்வேன்.

இந்நூலை இவ்வளவு சிறப்பாக உருவாக்குவதற்கு பல வகையிலும் உதவிய வணக்கத்துக்குரிய அந்தணப் பெருமக்கள் தர்மகர்த்தாசபையினர் அறிஞர்கள் பெரியோர்கள் எல்லோருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகள்.

இவ்வாலய வரலாற்றுக்குரிய ஆதாரபூர்வமான கருத்துக்களை நல்கிய அன்பிற்கும் மதிப்பிற்குரியவரும் எனது உறவினருமாகிய அமரர் திரு.சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் (பொன்னையா உபாத்தியாயர்) அவர்களுக்கும், என் அன்பிற்குப் பாத்திரமானவரும், நெருங்கிய உறவினருமாகிய செல்லையா மாமா (ஆசிரியர்) அவர்களுக்கும், பேரன்புக்குரிய திரு.இ.இராமச்சந்திரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந்நூலை சரிபார்த்து உதவிய சைவப் பெரியார் திரு.விசுவநாதன் ஆசிரியர் அவர்களுக்கும், இவ் ஆலயத்தோடு தொடர்புடையவரும் இவ்வூர் வாசியும் சொற்பொழிவுகள் ஆற்றி வருபவருமாகிய மன்னார் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு அவர்கள் வழங்கிய சிறப்புரைக்கும் பாராட்டுரை, வாழ்த்துரை, அணிந்துரை வழங்கிய பெரியார்களுக்கும் எனது மனம் கனிந்த நன்றிகள்.

ஆலயப் புகைப்படங்களை சிறப்பான முறையில் அமைத்துத் தந்த புகைப்படக் கலைஞர் செல்வன் காண்டீபன் அவர்களுக்கும் நன்றிகள்.

இந்நூலைப் பிரசுரிப்பதற்கு ஆலோசனைகள் தந்த முன்னாள் கற்றன் மாணிக்கப்பிள்ளையார் பிரதம குரு சுந்தரேஸ்வர சர்மா அவர்களுக்கும் நன்றிகள்.

இறுதியாக எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, பல பெரியார்களினதும் அறிஞர்களினதும் ஆலோசனைகளைப் பெற்று இந் நூல் சிறப்பாக அமைய சகலவிதத்திலும் எனக்கு ஒத்துழைப்பு நல்கிய என் அன்புத் தந்தையாருக்கும் என் நன்றிகள்.

இந்நூலைப் பிழையறவும் அழகுறவும் அச்சிட்டுதவிய SHANMUGHA COMPUTERS & PRINTERS நிறுவனத்தினருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கணபதீச்சரம்
28A, 2வர் ஒழுங்கை,
டிம்புல்ல றோட்,
ஹற்றன்.

கல்யாணி லோகநாதன்
முன்னாள் ஆசிரியை
அருணோதயக் கல்லூரி,
குன்றக்குடி,
டச்சு வீதி,
அளவெட்டி.

*பிற்குறிப்பு:-*

*இந்நூலின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி கும்பழாவளைப் பிள்ளையார் திருவிளக்குகளுக்கான எண்ணெய்ச் செலவுக்கான அறக்கட்டளை நிதியில் சேர்க்கப்படும்.*

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு.

# விநாயக வணக்க மகத்துவம்



*"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்*
*சரணவற்புத மலர் தலைக்கணிவோமே.*

*விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்*
*கண்ணிற் பணிமின் கனிந்து.*

*தும்பிமா முகவசுரன் தொலையவமர் புரிந்து*
*நம்பினோர்க் கனுக்கிரகம் நல்குமதி பதியாம்*
*கும்பழா வளைக் கொம்பன் குலவுகவி மாலை*
*இம்பரோ தினரும்பர் எங்கு மகிழ்வாரே.*

திருக்கைலாயத்தில் சர்வான்மாக்களுக்கும் தன் எல்லையில்லாத கருணையை உமாசமேதராய் எழுந்தருளியிருந்து அனுக்கிரகிப்பவர் சிவபெருமான். அப்பெருமானின் அணுக்கத் தொண்டராக விளங்கியவர் சுந்தரர். திருப்பாற் கடலில் தோன்றிய ஆலகால விடத்தைத் தமது உள்ளங் கையிலே அடக்கிக் கொண்டுவந்து சிவனிடம் கொடுத்த பெருமையால் ஆலாலசுந்தரர் எனும் பெயர் பெற்றவர். சிவபூசைக்கு மலர் கொய்யச் சென்ற பார்வதிதேவியின் சேடியர் இருவர் மேல் மனம் வைத்தமைக்காகப் பூமியிலே பிறந்தவர். அதற்கு வருந்தி எம்பெருமானிடம் தான் தவறுவிடும்போது தன்னைத் தடுத்தாட்கொண்டு மீண்டும் அழைக்கும்படி வேண்டிக் கொண்டவர் சுந்தரர். அதற்கிணங்க சிவபிரான்

வெள்ளையானையில் அழைத்து வரும்படி ஏவினார். திருவஞ்சைக் களத்தில் வெள்ளை யானை மேலேறிச் சுந்தரமூர்த்திநாயனார் கயிலை நோக்கி விரைந்து கொண்டிருந்த போது அவருடைய தோழராகிய சேரமான் பெருமாள் நாயனாரும் தம் குதிரைமேலேறிக் குதிரையின் செவியில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதியருள அக்குதிரை ஆகாயத்தில் பாய்ந்து விரைந்து சென்று, சுந்தரர் சென்ற வெள்ளை யானையை வலம் வந்து அயலில் இணைந்து சென்றது. அப்போது சேரமான் பெருமாள் நாயனார் திருக்கைலாய ஞானவுலா எனப்படும் ஆதியுலாவை அரங்கேற்ற ஒளவையாரை அழையாது வந்துவிட்டோமே எனக் கவலையுற்றார். அதனை விநாயகரைப் பூசித்துக் கொண்டிருந்த ஒளவையார் உணர்ந்தார். தானும் அவர்களுடனே கைலாயத்திற்குச் செல்ல வேண்டும் என்ற பெரு விருப்பால் துரிதமாகத் தமது பூசையைச் செய்யத் தொடங்கினார். அப்பொழுது விநாயகப் பெருமான் ஒளவையே நீ நிதானமாகப் பூசையைச் செய். அவர்களுக்கு முன்னதாகவே நீ போய்ச் சேரும்படி செய்கிறேன் என அருளிச் செய்தார். அக்கட்டளைப்படி பூசையைச் செவ்வனே செய்தார். ஒளவையார் பக்தி ததும்பச் "சீதக்களபச் செந்தாமரைப்பூம் பாதச்சிலம்பு பலவிசை பாட"என ஆரம்பித்து "தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட வித்தக விநாயக விரைகழல் சரணே" என்று பாடி முடித்தார். இதுவே விநாயகரகவல். பாடி முடிந்தபின் ஒளவையார் கையிலையிலே சேர்க்கப்பட்டார். சேரமானும், சுந்தரரும் ஒளவை கயிலையை அடைந்த பின்பே வந்து சேர்ந்தனர். தமக்குப் பின்பு வந்து சேர்ந்த சேரமான் பெருமாள் நாயனாரைப் பார்த்து ஒளவையார்,

*"மதுரமொழி நல்லுமையாள்*
*புதல்வன் மலர்ப்பதத்தை*
*முதிர நினைய வல்லார்கட் கரிதோ*
*முகின் போன் முழங்கி*
*அதிர நடந்திடும் யானையுந் தேரு*
*மதன் பின்வரும்*
*குதிரையுங் காதங் கிழவியுங்காதங்*
*குல மன்னனே"*

என்று பாடினார்.

ஈண்டு குறிப்பிட்ட அற்புத சந்தர்ப்பம் விநாயக வணக்கத்தின் பயனாய் அன்பர்கள் அருள் பெற்ற எண்ணிறந்த சந்தர்ப்பங்களுள் தலையாய எடுத்துக்காட்டாயமையுமொன்றாகும்.

# விநாயக வணக்கத்தின் பழமையும் முதன்மையும்

இத்தகைய அருட்பாத்திரராதற்குத் திறவு கோலாயமையும் விநாயக வணக்கம் மிகப் பழமையும் பெருமையும் பொருந்தியதாகும். விநாயக வழிபாடு பற்றிய குறிப்புக்கள் வடமொழியிலுள்ள வேதங்களிலோ தமிழிலுள்ள சங்க நூல்களிலோ குறிப்பிடப்படவில்லை. போதாயன தர்ம சூத்திரத்திற் கணபதி இடையூறுகளை உண்டாக்கும் ஒரு பூதமாகக் குறிப்பிடப்படுகின்றார். முதலில் இடையூறுகளை ஆக்குபவர் அல்லது விக்கினகர்த்தா என்னும் கருத்தில் மக்கள் அவரை அச்சத்தோடு வழிபட்ட நிலையை இது காட்டுகிறது. பின்னரே இடையூறுகளை நீக்குபவர் அல்லது விக்கினகர்த்தா என்னும் பொருளில் கணபதியை மக்கள் பயபக்தியோடு வழிபடும் நிலை உருவாகியது எனலாம். இந்நிலை தோன்றியதும் எந்தக் காரியத்தைச் செய்ய முற்படும் போதும் தமது முதல் வணக்கத்தை கணபதிக்குச் செலுத்தும் வழக்கம் இந்துக்களிடையே தோன்றியது. ஏதாவது எழுதத் தொடங்கு முன் "பிள்ளையார் சுழி" போடுதல் என்ற செயலும் இவ்வழக்கத்தையே குறிக்கின்றது. நாதமும் விந்துவும் இணைந்த குறியீடே பிள்ளையார் சுழியாகும். உலகின் முதன்முதலில் எழுத்தைக் கண்டுபிடித்து எழுத ஆரம்பித்தவர் விநாயகர் எனலாம். வியாசர் பாரதத்தை எடுத்துரைத்த போது அந்த மகாகாவியம் அழியாது அனைவரும் படித்து பேறு பெறும் பொருட்டு விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றையொடித்து எழுத்தாணியாகக் கொண்டு மகாமேரு மலையில் எழுதினார் என்பது புராண வரலாறு. எழுத்தைக் கண்டுபிடித்த கருணைக் கணபதிக்குத் தம் நன்றியறிதலைத் தெரிவிக்கும் பொருட்டு எழுதத்தொடங்குமுன் "பிள்ளையார் சுழி" போடுகிறார்கள் என்ற கருத்தும் நிலவுகின்றது. இதனாலேயே இவரை நாம் முழு முதற் தெய்வம் என்று போற்றுகின்றோம். விநாயகரே முதற் தெய்வம் என்பதற்கு இன்னுமொரு குறிப்புமுண்டு. பரசிவத்தை நாடச்செய்யும் சுழுமுனாநாடியை இயக்குவது நெற்றியிலுள்ள அமிர்த உறைவிடத்தைக் குட்டுவதனால் கலக்கி, மூலாதாரத்தைத் தொழிற்படச் செய்வதே. இப்படியாகிய மூலாதாரத்திற்கு அதிபதி நான்கு இதழ்களைக் கொண்ட தாமரையில் வீற்றிருக்கும் விநாயகரே. எனவே மூலாதார அதிபதியின் (விநாயகரின்) கருணை இல்லாவிட்டால் மனிதப் பிறவியின் பயனாகிய பரசிவத்தை அடைவது சிரமமே. எனவே, உலகில் முதற்கடவுளும் முதல் எழுத்தாளரும் இவரே என நூல்கள் கூறுகின்றன.

தமிழ் நாட்டில் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்றான் கணபதி வழிபாடு முதன் முதல் அறிமுகமானது எனத் தெரியவருகிறது. பல்லவ சேனாதிபதியாக வாதாபிக்குப் படையெடுத்துச் சென்ற பரஞ்சோதி வாதாபிப்போர் வெற்றியின் பின்னர் அங்கிருந்து கொண்டுவந்து திருச்செங்காட்டங்குடியில் பிரதிட்டை செய்த கணபதி வழிபாடே மிகப் பரந்த முறையிலே தமிழகம் எங்கும் பரவியதென்பது வரலாற்றறிஞர் கருத்து. இன்று குளக்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் அரசமரத்தடிகளிலும் கூடப் பிள்ளையார் வைத்து வழிபடுவதைக் காணலாம்.

இவ்வாறு பரவிய கணபதிவழிபாடு உலகெங்கிலும் நிலவிய சிறப்புப் பெற்றது. இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்களும் வழிபட்டதாக வரலாறுகள் சான்று பகருகின்றன. நேபாளம், சீனா, திபேத்து, ஜப்பான் போன்ற இடங்களிலும் மக்கள் கணபதியை வழிபட்டனர். ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் மட்டுமன்றி ஆபிரிக்காவிலும், வடஅமெரிக்காவிலும் விநாயக வழிபாடு நிகழ்ந்தது என அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இவ்விதம் உலகெங்கிலும் பரவியிருந்த விநாயக வழிபாடு இலங்கையிலும் மிக வேகமாகப் பரவியது. பாலித்தீவில் பூசிக்கப்பட்ட கபாலவிநாயகர் இலங்கைக்கும் கொண்டுவரப்பட்டமையை நாம் அறிவோம். வன்னி மாவட்டங்களிலும் புராதன அநுராதபுரத்தில் பசவக்குளத்துக்கு அண்மையிலும் நுவரவீவா அணைக்கட்டுக்கருகேயும், தேவிநுவரவிலும் இன்னும் பல இடங்களிலும் விநாயக வழிபாடு நிலவியதாகச் சான்றுகளும் அவ்விடங்களிலேயே காணப்பட்ட அழிபாடுகளும் காட்டுகின்றன. வேடர்களும் விநாயக வணக்கம் செய்ததாகக் கூறப்படுகிறது. "பிலியந்தா" என்ற பெயரால் அவர்கள் விநாயகரை வழிபட்டனர். பிலியந்த என்பது சிங்கள மொழியில் பிள்ளையைக் குறிக்கும். பௌத்தர் கணேசருக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தமது தேவாலயங்களில் அமைத்து "கணதெய்யோ" என்று கூறி விநாயகரை இன்றும் வழிபட்டு வரும் சிறப்பைக் காணலாம்.

இத்தகைய விநாயக வணக்கம் யாழ்ப்பாணத்தில் நிலைபெற்றிருந்து பக்தர்கள் பயனடைந்தமை விநோதமல்ல.

# அளவெட்டியில் விநாயக வணக்கம்

யாழ்குடாநாட்டில், புராதன காலம் முதல் சைவம் பரவியிருந்தது. சிவ, தேவி, விநாயக, முருக வழிபாடுகள் முக்கியமாக இடம் பெற்றன. மூர்த்திகள் ஆகம முறைப்படி ஸ்தாபனம் செய்யப்பட்டு விதி தவறாது அர்ச்சிக்கப்பட்டும் வணங்கப்பட்டும் வந்திருக்கின்றன. விநாயகர் தமக்கு மேலான தலைவரின்மையாலும், வணங்குவோரின் விக்கினங்களை நீக்கியருளுபவராதலாலும், கிராமந்தோறும் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபடு தெய்வமாக விளங்குகிறார். மந்திரங்களுட் தலையாயதாம் பிரணவத்தின் பரத்துவ வடிவமே விநாயகராதலாலும், வேண்டுவோர் வேண்டுவதை யருளலாலும், விநாயகருக்கு ஆலயங்கள் எங்கும் அமைக்கப் பட்டமை பொருத்தமானதே. யாழ்ப்பாணத்தில் எங்கும் சைவமும் தமிழும் ஒன்றி வளர்ந்தனவாயினும் விசேடமாகப் பரிபாலிக்கப்பட்ட தலையாய சில கிராமங்களுள் அளவெட்டியும் ஒன்றெனபது உயர்ந்தோரொப்புக்கொண்ட முடிவாகும். அத்துணைச் சிறப்பு வாய்ந்த அளவெட்டியில் மத்திய ஸ்தலமாக விளங்குவது கும்பழாவளை விநாயகராலயம். இவ்வாலயம், நம் முன்னோர் தலைமுறை தலைமுறையாக வழிபட்டு வந்த ஸ்தலமாதலாலும், எனது குலதெய்வமாகக் கொண்டு சிறியேன் வழிபாடாற்றுமிடமாதலாலும் அவ்வாலயத்தைப் பற்றிக் கல்வி கேள்விகளால் யானறிந்த சில விடயங்களை என் சிற்றறிவுக்கெட்டிய வரை எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் துணைகொண்டு எழுதலாம் என விழைகின்றேன்.

# ஆலய அமைவிடம்

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது மல்லாகம். மல்லாகச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் சங்கானைவல்லை வீதியில் ஏறக்குறைய ஒன்றரை மைல் தொலைவில் கீரிமலைக்குச் செல்லும் வீதி பிரிகின்றது. கீரிமலை வீதி பிரியுமிடத்திலிருந்து கூட்டுறவாளர் வீதியில் கால்மைல் தூரத்தில் "பிள்ளையார் வீதி" அமைந்துள்ளது. பிள்ளையார் வீதி என எழுதப்பட்ட வழிகாட்டிப் பலகையையும் அவ்விடத்திற் காணலாம். வீதிவழியே சென்றால் நாம் கும்பழாவளைக் கோயில் முன்றிலை அடையலாம்.

# தல வரலாறு

பூர்வீகத்திலே மாருதப்புரவீகவல்லி என்னும் பெயருடைய சோழ அரசிளங் கன்னிகை குதிரை முகமுடையவளாய்க் குஷ்டரோக வாய்ப்பட்டமையால் அக்குதிரை முகமுங் குஷ்டரோகமும் நீங்குவதற்குப் பற்பல சிகிச்சைகள் மேற்கொண்டும் தெய்வ வழிபாடுகள் ஆற்றியும் நோய் தீராமை கண்டு தவசிரேஷ்டர் ஒருவரின் வாக்குப்படி வட இலங்கையை அடைந்தாள். யாழ்ப்பாணத்தின் வட கரையிலுள்ள கீரிமலை என்னும் திவ்விய தீர்த்தத்திற் கந்தசுவாமி உபாசனையுடன் ஸ்நானஞ் செய்து ஒரே நிரையில் மாவிட்டபுரம் முதலாகத் தென்திசை நோக்கி ஐந்து கோவில்களிலே கந்தசுவாமி விக்கிரகங்களை ஸ்தாபனஞ் செய்து வழிபட்டாள். அவளது நோயும் குதிரை முகமும் நீங்கப்பெற்றது. குறித்த குதிரைமுகம் பிறர் பார்வைக்கு நீங்கியதாயினும் அவளது சொந்த நினைவுக்கும் பார்வைக்கும் நீங்கப்பெறவில்லை. அதன் காரணம் யாது என ஆராய்ந்த போது கந்தசுவாமி வழிபாட்டுக்கு முன் விக்னேஸ்வர ஆராதனை செய்யாமையே என தவப்பெரியோர் கூறக்கேட்ட இராஜகுமாரத்தி தன் பிழைக்கு மனம் நொந்தாள். விக்னேஸ்வரரைத் தியானித்து "மெய்யருள் பாலிக்கும் மெய்ப்பொருளாயுள்ள பெருமானே, அறியாமையாற் செய்த என் பிழையை மன்னித்து என் மேலிரங்கியருளுக. யான் செய்த பிழைக்கு பிராயச்சித்தமாக உமது பிரதிரூபத்தை ஏழு ஸ்தானங்களிற் பிரதிட்டை செய்து வழிபாடாற்றுவேன்" என்று வாக்குறுதி பண்ணினாள். கொல்லங்கலட்டி முதலாகத் தென்திசை நோக்கி ஒரே நிரையில் ஏழு ஸ்தலங்களில் விக்னேஸ்வரப் பிரதிட்டை செய்வித்தாள். கொல்லங்கலட்டி, வரத்தலம், அளகொல்லை, கும்பழாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை என்பனவே அத்தலங்களாகும். இவைகளுள் மத்திய ஸ்தலமாயுள்ள கும்பழாவளையில் விக்னேஸ்வரார்ச்சனை முடிந்தபோது குமாரத்தியின் குதிரை முகச்சாயை அவளது சொந்தப் பார்வைக்கும் முற்றாக நீங்கியதாயிற்று. இக்கும்பழாவளையின் முன்றிற் சோலை மாவிழிதிட்டி (மா+இழி+திட்டி)எனவும் இத்தலத்தின் தென்கிழக்கு மூலையிலிருந்த வயல் (இது முன்பு குளமாயிருந்தது) "குமாரத்தி குளம்" எனவும், அழைக்கப்பெற்றமை இவ்வரலாற்றை உறுதி செய்கின்றன. இவ்வரலாறு ஆலய திரு ஊஞ்சல் ஒன்பதாவது பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாலயத் திருப்பள்ளியெழுச்சிப் பாடலிலும் "மாவையூர் முருகனின்

வரம்பெறு வனிதையாம் மாருதவல்லியின் மாமுக நோய்தனை மாவிழிதிட்டி முன் வந்து நின்றகற்றி" என்று குறிப்பிட்டுள்ளது.

இவ்வாலயம் மாருதப்புரவீக வல்லியின் வருகைக்கு முன்பே இருந்தது என்பது ஐதீகம். மாடுமேய்க்கும் ஒருவர் தன் மாடுகளை மேயவிட்டுவிட்டு இந்த இடத்திலே இருந்த ஒரு மரத்தின் கீழே படுத்து உறங்கி விட்டார். உறக்கம் நீங்கி எழுந்த போது எதிரே உள்ள ஒரு மண் மேட்டில் ஒரு சோதி தெரிந்தது. சோதியைச் சூழ்ந்து எருக்கம் செடிகள் இருந்தன. அதன் மத்தியில் ஒரு பெரிய கல் ஒன்று இருந்தது. இதைக்கண்ட மாடு மேய்ப்பவர் இச்செய்தியை ஊராருக்குச் சொல்ல, அவர்கள் வந்து பார்த்து, அதிசயித்து, இக்கல்லை சிவன் என்றும், அம்மை என்றும், வைரவர் என்றும், முருகன் என்றும், வழிபட்டுவந்தனர். அப்போது ஒரு இறைபக்தியுள்ள ஒரு பெண்ணின் கனவில் விநாயகப் பெருமான் தோன்றி இந்த மண்மேட்டில் நான் இருக்கின்றேன் என்னைப் பிள்ளையார், கணபதி, விநாயகன் என வழிபடும்படி கூறியதாகவும், ஒரு கொம்பை ஏந்தியபடி காட்சியளித்தபடியால் கொம்பு+ஆவளை= கொம்பழாவளை எனவும் கொம்பழாவளை மருவி கும்பழாவளை என வந்தது. பசுக் கூட்டங்கள் கும்பலாக மேய்ந்த இடம் ஆகையால் கும்பல்+ ஆவளை கும்பழாவளை எனப் பெயர் உண்டாயிற்று எனவும் சொல்லப்படுகின்றது. மாருதப்புரவீகவல்லி கொல்லன் கலட்டி முதல் ஏழு விநாயகர் ஆலயங்களை அமைத்துக் கொண்டு வரும் போது இந்த மண் மேட்டில் வந்த போது தனது குதிரை முகம் தன் பார்வைக்கும் மாறியதால் விநாயகப் பெருமானின் ஆலயத்தை நிறுவி வழிபட்டாள் என்பதும், கர்ணபரம்பரைக் கதையாகும்.

இவ்வாலயத்திற் பக்தி சிரத்தையோடு வழிபட்டு வந்த மெய்யடியார்க்கு வேண்டிய அருள் பாலித்து மெய்யருள் அடையாளங்களாக எண்ணிறைந்த அற்புதங்களை நிகழ்த்தி அருள்பாலிப்பவர் கும்பழாவளை விநாயகப் பெருமான். அற்புதங்களை எல்லாம் விரிக்கிற் கணக்கின்றிப் பெருகும். எனினும், மனம் நொந்த மெய்யடியார் ஒருவர் துயர் அகல, தென்னை மரமொன்றின் ஒரு பகுதி வழமைபோல பச்சையாயிருக்க மறுபகுதி சூரியகாந்தமுடைய பொன்னிறத்ததாக்கிய ஒன்றையாவது இங்கு எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

ஆசாரசீலரும், விநாயக பக்தரும் இவ்வாலயப் பூசகருமாகிய சுப்பையர் அவர்கள் பெருமானுக்கு அபிஷேகம் செய்வதற்காக செவ்விளனீர் தரும்படி ஓர் அன்பர் இல்லத்திலே கேட்டார். அவ்வன்பர் அவரை ஏளனம் செய்து செவ்விளனீர் கொடுக்க மறுத்துவிட்டார். இதனால் மனம் நொந்த அந்தணப் பெருமகன் பெருமானை எண்ணி வருந்தினார். அவரின் பக்தியை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும் என்ற விருப்பினாலோ என்னவோ பெருமான் இவ்வாறு அவரை மனவேதனையடையச் செய்து பின் ஒரு மரத்திலேயே ஒரு பக்கம் பைங்காயாக இருக்க மறுபக்கத்தை செங்காயாகச் செய்தார். இது பெருமானின் அற்புதச் செயலேயாகும். இவ் அற்புதத்தைக் குறிக்கும் பாடலொன்றையும் குறித்து அமைகின்றேன்.

"சித்தங்குலைந்தவடியான் மனத்துயர் தீரவெண்ணி,
அத்தெங் கொருகுலை யோரிலை பாதியருணநிறம்
வைத்தங்கெவர்க்கு முன்னற்புதங்காட்டி மகிழவைத்தாய்
நத்தந் தருவினை யேற்கரிதோ வருள் நல்குவதே."

இவ்வற்புதக் கோலத்தை ஆலயக் கோபுரத்திலே சிற்பாசாரியார் அழகாக அமைத்துள்ளார். "தென்னையிற் பைங்காய் செங்காயாகச் செய்து நின் பூசகர் மனம் குளிர்வித்தனை" என்ற பாடல் அடியும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## போர்த்துக்கேயர் காலத்தில் ஆலயம்

யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் கைப்பற்றப்பட்டபோது, கிட்டத்தட்ட எல்லாச் சைவாலயங்களும் இடிக்கப்பட்டன. கும்பழாவளை விநாயகராலயமும் இடிக்கப்பட்டபோது, ஆலய மூலஸ்தான விக்கிரகம், அருகாமையில் வாழ்ந்த மரவேலை செய்யும் அன்பர் கணபதி என்பவரால் ஒரு மாமரப் பொந்தில் எடுத்து வைத்துப் பாதுகாக்கப்பட்டு பூசிக்கப்பட்டதென்பது கர்ணபரம்பரைக்கதை. இதன் பின்னர் ஆங்கிலேயராட்சிக் காலத்தில், மத சுதந்திரம் வழங்கப்பட்டமையால் நாடெங்கிலும் சைவாலயங்கள் மீண்டும் எழுந்தன.

## ஆங்கிலேயராட்சியிலும் அதன் பின்னரும்.

1811ம் ஆண்டளவில் கும்பழாவளையில் இவ்வாலயக் கர்ப்பக்கிருகமும், மகாமண்டபமும் கட்டப்பெற்றன. இதற்குச் சாசனம் உண்டு. ஒல்லாந்தர் காலத்தோம்பில் இவ்வாலயத்தைப் பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன.

1847ம் ஆண்டு எழுதப்பட்ட தோம்பில் இவ் ஆலய மூலஸ்தானம் கற்களால் கட்டப்பட்டு ஓலையால் வேயப்பட்டது எனவும், இதன் பரிபாலகர்களாக இராசதுங்க முதலியார், பழனிப்பிள்ளை என்பவரும், இராமலிங்க ஐயர் சுப்பையர் என்பவரும் விளங்கினர் எனவும் இவ்வாலயத்தில் வைகாசி மாதத்தில் பதினொரு நாட்கள் மகோற்சவமும், ஐப்பசி மாதத்தில் ஆறு நாட்கள் கந்தசஷ்டி விழாவும் மார்கழி மாதத்தில் பத்து நாட்கள் விழாவும் (திருவெம்பாவை) சிறப்பாக நடைபெற்றன எனவும்; விழாக்காலங்களில் ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் வழிபாடு செய்வார்கள் எனவும்; அளவெட்டி, தெல்லிப்பளை, மல்லாகம், கந்தரோடை, சண்டிருப்பாய், மாகியப்பிட்டி, சிறுவிளான், பெரியவிளான் ஆகிய கிராமங்களிலிருந்து வழிபாடு செய்ய மக்கள் வருவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

பின் ஆலயத்தைப் புதுப்பித்து மூலஸ்தானம், மகாமண்டபம், முதலியன கற்றிருப்பணியாகச் செய்யப்பட்டது. அக்காலத்தில் வாழ்ந்த குமாரு நன்னியர் என்னும் பக்தர் (இவர் விறுவிறுப்பான நடையும் சுறுசுறுப்பாக வினையாற்றும் திறனுமுடையவராதலால் "சுறுக்கன்" என அன்பாக அழைக்கப்பட்டவர்) முன் நின்று கிராமவாசிகளனைவரிடமும் விளைவில் ஒரு பங்கைத் திருப்பணிக்காகப் பெற்றும், வளவுக்கொரு தென்னையை கும்பழாவளைப் பிள்ளையாருக்கு குறித்து வருமானம் எடுத்தும், வீடு தோறும் பிடியரிசிக்குட்டான் கொடுத்துச் சேரும் அரிசியை மாதம் தோறும் சேர்த்தும் ஈட்டிய பொருள் கொண்டு 1893ல் அர்த்த மண்டபம் வரை கட்டி முடித்தார். 1903ல் மகாமண்டபம் ஆரம்பிக்கப்பட்டு 1911ல் அது பூர்த்தியாக்கப்பட்டது. 1911ம் ஆண்டு ஆலயபிரதம பூசகரின் வேண்டுகோளின்படி வைத்திய கலாநிதி சீனிக்குட்டி என்பவரால் இம்மண்டப முகப்பும் கட்டப்பட்டது. மகா மண்டப முகப்பில் காணப்படும் கல்வெட்டுச்சான்று இதனை உறுதி செய்கின்றது.

கர்ப்பக்கிருகம் தொடக்கம் மகா மண்டபம் வரை வெள்ளைப் பொளி கற்களால் அழகாக கட்டப்பட்டுள்ளது. மகாமண்டபத்தின் தூண்கள் போதிகைத் தூண்களாகும். மேற்பகுதியாகிய விதானமும் கற்களாலேயே பாவப்பட்டுள்ளது. இவ்வாறு விதானப்பகுதி கற்களால் அடைக்கப்பட்டமை குறிப்பிடக்கூடிய சிறப்பம்சமாகும். இவற்றை விட அக்காலத்திற் கட்டப்பட்ட தூபியே இன்றும் ஈடிணையற்று விளங்குகின்றது. யாழ்ப்பாணத்தில் எந்தக் கோவிலிலும் காணமுடியாத அளவு சிற்பச் சிறப்போடு இத்தூபி விளங்குகின்றது. அதைப் பார்வையிட்ட ஸ்தபதியார்களில்

(போதி - தூண்)



# ஆலயத் தூபி

பிரமிக்காதாரில்லை எனலாம். இத்திருப் பணிக்காலச் சிலாசாசனம் ஆலயத் தெற்குச் சுவரில் அமைந்திருக்கின்றது.

ஏனைய மண்டபங்களும், கொடித்தம்பம் முதலியனவும் அன்பர்களாற் செய்யப்பட்டு ஆலயம் ஓரளவிற்குப் பூர்த்தியாகியுள்ளது. நித்திய நைமித்திய பூசைகளும், விழாக்களும், மகோற்சவங்களும் கிரமமாக நடைபெற்று வந்தன.

சில நூற்றாண்டுகட்கு முன்னதாக சீதேவன் என்னும் மூதாட்டி இக் கிராமத்தில் வாழ்ந்துள்ளார். இம்மூதாட்டி சிதம்பரத்தில் பூசையில் வைத்துப் பூசித்த யந்திரம் இங்கு கொணரப்பட்டது. கும்பழாவளை விநாயகர் ஆலய மூலஸ்தானத்தில் அந்த யந்திரம் வைத்துப் பூசிக்கப்பட்டு வந்ததாகவும், இவர் தன் சொந்த முயற்சியால் ஒரு கிணற்றை உருவாக்கியதாகவும், அக்கிணறே இன்றும் ஆலய மடப்பள்ளிக்குள் இருப்பதாகவும் வரலாறு தெரிந்த முதியோர் கூறுகின்றனர். அக்கிணறு முப்பதடி ஆழம் உடையது.

## வழக்குகள்

இவ்வாறு பலவகையிலும் வளர்ச்சியடைந்த ஆலயத்தில் கிராமத்தில் ஏற்பட்ட பிளவுகளாலும், ஆலய நிருவாகச் சீர்குலைவினாலும் இருமுறை நீதிமன்றில் வழக்குகள் நடைபெற்றன. விக்னேஸ்வரப் பெருமானருளால் ஈற்றில் 1948ம் ஆண்டு சமாதானத் தீர்வொன்று காணப்பட்டு அவ்வாண்டு ஐப்பசி மாதத்திலிருந்து ஆலய நிருவாகம் ஏழுபேர் கொண்ட தர்மகர்த்தாக்கள் சபையின் கீழ் இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. (இவ் வழக்குத் தீர்ப்பு விபரம் இப்புத்தகத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.)

## தற்கால வளர்ச்சியும் நிருவாகமும்

தர்மகத்தர்களின் கீழ், ஆலயத்தில் ஏற்பட்ட வளர்ச்சி ஆலயத்தின் பொற்காலம் என்பதைப் புலப்படுத்தும். தர்மகத்தர்கள் சபை பொறுப்பேற்ற அடுத்த ஆண்டில் (1949ல்) புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் ஊர்ப்பொதுவாக நடைபெற்றது.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற முதுமொழியின் பேருண்மையை அறிந்த தர்மகர்த்தா சபையினர் 1953ம் ஆண்டு மூன்று மாடங்களைக் கொண்ட இராஜகோபுரம், மணிக்கூட்டுக்கோபுரம்

என்பவற்றிற்கு அத்திவாரம் இட்டனர். 1962ம் ஆண்டு இவை பூர்த்தியாக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இம்மணியோசை இரண்டு மைல் தொலைவிற்கப்பாலும் கேட்கும் தன்மை வாய்ந்தது. இதனை உபகரித்தவர் அளவெட்டி கண் வைத்தியர் திரு.நா.செல்வவிநாயக மூர்த்தி ஆவார்.

கோபுரத்திற்கு வைக்கப்பட்ட பாவுகற்களும், நிலைக்கற்களும் திரு.செல்லத்துரை என்பவரால் காலியில் இருந்து தருவிக்கப்பட்ட கருங்கற்களால் அமைக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்பாகும். சில கற்கள் நல்லூர் கோயிலிலிருந்து முள்ளானையைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய சிறாப்பர் கனகசபை என்பவர் மூலம் பெறப்பட்டன. இப்பாவு கற்களை அமைத்தவர் அராலியைச் சேர்ந்த நாகமுத்து என்ற ஸ்தபதி ஆவார். கோபுர மேல் வேலைகள் ஸ்தபதி குஞ்சிதபாதம் அவர்களால் நிறைவுற்றன.

ஆலயங்கள் வழிபாட்டிற்குரிய இடமாக மட்டும் அமையாது ஓவியக்கலை, சிற்பக்கலை, நடனக்கலை, இசைக்கலை போன்ற கலைகள் வளர்வதற்குரிய இடமாகவும் அமைந்துள்ளன. அவ்வகையிலே எம் ஆலயமும் இவற்றை வளர்க்கின்ற நிலைக்களனாக அமைந்துள்ளது.

இவ்வாலயக் கோபுரம் கலையம்சம் பொருந்தியதாகவும், மூலமூர்த்தியின் வெளிப்படையான குறியீடாகவும், ஆலய மூலமூர்த்தியுடன் தொடர்புடைய வரலாற்றுக் கதைகளை விளக்குவதாகவும் அமைந்துள்ளது. சமயத் தொடர்பான இந்தச் சிற்பங்கள் அக்காலச் சிற்பிகளின் சமய அறிவையும், நுண்கலைத்திறனையும் நன்கு உணர்த்துவன. உள்ளத்தில் அழுந்திய சமய உணர்ச்சி இல்லையாயின் இவ் அழகிய சிற்பங்களை அமைத்திருக்க முடியாது. அவ்வாறு எம் ஆலயக் கோபுரத்திலே அமைக்கப்பட்ட முக்கிய சிற்பங்களாவன:-

1. அன்பர் ஒருவரின் அளவிறந்த பக்தியினால் பைங்காய் செங்காயாக மாறியமை.
2. தெற்குப் பக்கத்தில் முனிவரிடம் குதிரைமுகம் உடைய மாருதப்புரவீகவல்லி வணங்கி நிற்பதும் பின் முருகப் பெருமானை வணங்குவதும், அதன் பின்னர் விநாயகரை வணங்குவதும்.
3. தட்சணாமூர்த்தியிடம் சனற்குமார முனிவர்கள் நால்வரும் ஞேனாபதேசம் பெறுதல்.



தேர்முட்டி

இவை தவிர ஆலய வரலாறும் ஆலயத்தோடு தொடர்புடைய சில அற்புதங்களும் புராணக்கதைகளும் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

கோபுரப் பாரியகதவு திரு.வே.தம்பிமுத்து அவர்களால் செய்து உபகரிக்கப்பட்டது. தர்மகர்த்தாக்கள் சபை பொறுப்பேற்று 1979ம் ஆண்டின் பின் மூன்றாவது புனருத்தாரண கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இவ் வேலைகள் யாவும் ஊர்ப்பொதுவாகவே நடைபெற்றன.

## திருப்பணி வேலைகள்

தர்மகர்த்தாசபை பொறுப்பேற்ற பின் பல திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. 1950ம் ஆண்டு ஆலயத்தில் ஒரு களஞ்சிய அறை கட்டப்பட்டது. அதனுள் ஆலயத்திற்குச் சொந்தமான பல பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. ஆலய முன்றலில் அடியார்கள் வழிபடத்தக்க வகையில் அழகாக ஒரு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இம் மண்டபம் முதலில் சிறிய மண்டபமாக ஆறு தூண்களில் கட்டப்பட்டிருந்தது. ஆதியில் கிடுகினால் வேயப்பட்டு பின் ஓடுகள் போடப்பட்டன. பின்னர் இம்முன்மண்டபம் அதே சந்ததியைச் சேர்ந்தவரும் அளவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் கிராண்ட் ஹோட்டல் சொந்தக்காரருமாகிய திரு.வ.துரையப்பா அவர்களின் விருப்பப்படி அவர்தம் மனைவி திருமதி.பாக்கியம் துரையப்பா அவர்களால் 1966ல் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டது. இம்மண்டபம் 75அடிநீளமும் 50அடி அகலமும் கொண்டது.

இம்மண்டபத்திற்கு மேலும் அழகான முகப்பு ஒன்று திருவாளர் நன்னித்தம்பி வைரமுத்து அவர்களின் வழித்தோன்றல்களினால் பெருந்தொகையான செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இம்முகப்பு ஆலயத்திற்கு அழகு செய்வதாக அமைந்துள்ளது.

சிங்கப்பூரில் வசித்த சின்னப்பு தம்பதிகளினால் மூன்று தேர்களும் நிற்கக் கூடியதாக ஒரு தேர்முட்டி அழகான முறையில் ஏறக்குறைய 20,000ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது.

இம்மூன்று தேர்களையும் பாதுகாப்பாக விடுவதற்கு அழகான தேர்க்கொட்டகையும் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்க்கொட்டகை அமைப்பதற்கு காணி போதாமையினால் திரு.இ.இராமச்சந்திரன் அவர்களால் காணி கொடுக்கப்பட்டது.

இத்தேர்க்கொட்டகையும், தேர்முட்டியும் அமைப்பதற்கு கட்டட அமைப்பு முறை ஆலோசனையை வழங்கியவர் பொறியியலாளர் திரு.சதாசிவம் அவர்கள் (வேலணை முன்னாள் கிராமசபைத் தலைவர்) இவற்றைக் கட்டியவர் ஸ்தபதி.சாந்தலிங்கம் என்பவர். தேர்க்கொட்டகை மேற்கூரை வேலை முழுவதும் அளவெட்டி வடக்கு வ.குமாரசாமி குடும்பத்தினராலும் நிலக்காறை வேலை திருமதி நவரத்தினராசா அவர்களாலும் செய்யப்பட்டன. இத்தேர்க்கொட்டகை 1979ல் ஊர்ப்பொதுவாக ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் ரூபா செலவில், யாழ்ப்பாணத்தில் எந்த ஆலயத்திலுமில்லாதவாறு பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இங்கிலாந்து வாழ் அன்பர்களால் தண்ணீர்த் தொட்டி 20,000 ரூபா செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் வசிக்கும் திரு.N.S.கந்தையா அவர்களால் ஆலயம் முழுவதற்கும் மின் இணைப்பு 22,000ரூபா செலவில் அமைத்து உதவப்பட்டது.

1985ல் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை புகுந்த இடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட காலஞ் சென்ற தலைமை ஆசிரியர் திரு.செல்லப்பா சரவணமுத்துவின் ஞாபகார்த்தமாக புதல்வர்களால் இவ்வாலயத்திற்கு மின்யந்திரம் ஒன்று வழங்கப்பட்டது.

இவ்வாலயத்திற்கு காரியாலயம் ஒன்று அவசியம் என்பதை உணர்ந்த திருவாளர் சண்முகம் அவர்கள் 10,000ரூபா செலவில் காரியாலயத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.

வசந்த மண்டபத்தில் வண்ணத்திரை உபயத்தை திருமதி.வி.சின்னம்மா என்பவர் செய்து கொடுத்துள்ளார். முன்மண்டப கோபுர வர்ண அமைப்பைத் திருநெல்வேலியைச் சேர்ந்த இரத்தினம் கனகராஜா குழுவினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.



புதிய வசந்த மண்டபமும், பஞ்சமுகவிநாயகரின்
புதிய மண்டபத்தின் ஒருபக்கத் தோற்றமும்

# புனருத்தாரண மகா கும்பாபிஷேகம்

இவ்வாலயத்தின் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் 2002ம் ஆண்டு தை மாசம் 19ம் திகதி 1-2-2002 வெள்ளிக்கிழமை பிரதிஷ்டா சிரோமணி சிவஸ்ரீ சாமிவிஸ்வநாதக் குருக்கள் தலைமையில் இனிது நடைபெற்றது. இவ்வாலயத்தின் சுற்றுப் பிரகாரச்சுவர்கள், கூரைகள் முழுமையாகப் புனரமைக்கப்பட்டன. திரு.க.வேலுப்பிள்ளை குடும்பத்தினரால் ரூபா ஏழே கால் இலட்சம் செலவில் புதிதாக வசந்த மண்டபம் தனி உபயமாகவும் திரு.அ.விசுவநாதன் குடும்பத்தினரால் ஒரு லட்சம் ரூபா செலவில் சண்டேஸ்வரர் ஆலயமும், திரு.மா.மயில்வாகனம் குடும்பத்தினரால் ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் வெளிமண்டபப்புனருத்தாரண வேலைகளும் திரு.க.சிவலிங்கம், திரு.க.கந்தசாமி, திருமதி.சி.நாகேஸ்வரி, திருமதி.லோ.கேதீஸ்வரி, திருமதி.கா.சியாமளா ஆகியோர்களால் ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபா செலவில் நால்வர் ஆலயமும், திரு.கா.முருகையா குடும்பத்தினரால் ஒன்றே கால் லட்சம் செலவில் வடக்கு வீதி வாசல் கரணக் கூடு கொண்ட கோபுர அமைப்பும், தனிப்பட்ட உபயங்களாக அமைக்கப்பெற்றுள்ளன. பஞ்சமுக விநாயகர் ஆலயம், நடேசர் ஆலயம், யாகசாலை, தெற்கு வாயில் கோபுரம், வாகனசாலை, களஞ்சியம், காரியாலயம், வீதிச் சுவர்கள், மண்டபக்கூரை வேலைகள், யாவும் பொது உபயங்களாக அமைக்கப்பெற்றுள்ளன. இவற்றோடு மேற்கு வீதிச் சுவரில் அமைக்கப் பெற்ற சித்திரங்கள், மகா மண்டபத்தில் தெற்குச் சுவரில் அமைக்கப்பெற்ற விநாயகரின் 16 தோற்றங்கள், மண்டபத் தூண்கள் இவைகளும் புனருத்தாரணத்தின்போது அமைக்கப்பெற்றுள்ளனவே. ஒவ்வொரு தூண்களிலும் உள்ள நான்கு பட்டங்களிலும் பூதங்கள், யானைகள், விநாயக உருவங்கள், யாளிகள் அலங்கரிப்பது சிற்பத் திறமையை எடுத்துக்காட்டுவனவாகும். மாகா மண்டபத்தின், உள்ளும், வெளிப்புறத்திலும் முன்னர் திரு.சி.பொன்னம்பலம் அவர்களால் வரையப்பட்ட ஓவியங்கள் நீக்கப்பட்டுவிட்டன. புனர் நிர்மாண வேலைகள் அனைத்தும் ஏறக்குறைய 21/2 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மேலும் இவ்வாலயத்தில் ஒரு கல்யாணமண்டபமும் தீர்த்தக்குளத்தைச் சுற்றி மதில்களும் அமைக்கப்படவேண்டியுள்ளன. 1995 ம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின்போதும் இவ்வாலயத்தில் வழமையாக நடைபெறும் பூசைகள் தவறாது நடைபெற்றமை விநாயகப்பெருமானின் அருட்செயலை எடுத்துக்காட்டுவதாகும். ஆலயம் தற்போது புதுப்பொலிவோடும், அழகோடும் விளங்குவதற்கு அப்பெருமானின் அருட்டிறனும் அன்பர்கள் அடியார்களின் அர்ப்பணிப்பும் காரணமாகும். இவ்வாலயத்தின் புனருத்தாரண வேலைகளை யாழ் "றூலன்ஸ்" ஸ்தாபனத்தார் மிக அழகாக வடிவமைத்துத் தந்துள்ளனர்.

## விக்கிரகங்கள்

மூலமூர்த்தி மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட மூர்த்தியே தற்போதும் உள்ளது. இம்மூலமூர்த்திக்கு வெள்ளி அங்கி காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னையா சகோதரர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

ஆலயத்தின் உட்பிரகார வடக்குப் பகுதியில் சிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர் விக்கிரகம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விக்கிரகத்தை அளவெட்டியைச் சேர்ந்த வேலாயுதர் கணபதிப் பிள்ளையின் ஞாபகார்த்தமாக இ.சுப்பிரமணியம் அவர்கள் 1987ம் ஆண்டு அமைத்துக் கொடுத்துள்ளார். இப் பெருமானுக்கு நடேசர் அபிஷேக தினங்களாகிய 6 நாட்களும் அபிஷேகங்கள் நடைபெற்று வீதியுலா வருகின்ற காட்சி அற்புதமானது.

அடுத்து அண்டங்களுக்கெல்லாம் அன்னையாக விளங்கும் சக்தியை புவனேஸ்வரி அம்மனாகப் பிரதிட்டை செய்துள்ளனர். இவ் அம்மன் விக்கிரகத்தை விநாயக பக்தரும், அம்பாள் உபாசகரும் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு.சோ.சிவப்பிரகாசம் அவர்கள் 1988ம் ஆண்டு அமைத்துக் கொடுத்துள்ளார்கள்.

இந்த அம்பாளின் அருளை வேண்டி மங்களவாரமாகிய ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் உதயபூசையிலே சிறப்பான அர்ச்சனை நடைபெற்று வருகின்றது. தனது கருணை நிறைந்த அருட்பார்வையினாலும் சாந்தமான வதனத்தினாலும் அடியார்களைக் காத்துத் தனது திருவடிகளிற் சேர்க்கின்ற பாவனையிலே இவ் அம்பாளின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அம்பிகை வழிபாட்டில் மந்திர பூஜை முறையில் வழிபடுவது சிறப்பானதும் சக்தி மிக்கதும் ஆகும். சிவகோணங்கள் இணைந்து ஒன்றையொன்று வெட்டுவதால் மொத்தம் நாற்பத்து மூன்று கோணங்கள் உண்டாகின்றன. அதன் நடுவணையில் 'பிந்து' மண்டலம் என்ற இடத்தில் அம்பிகை எழுந்தருளுகிறாள். எல்லாச் சக்கரங்களையும் விட (யந்திரங்களையும்விட) அன்னை உறையும் ஸ்ரீ சக்கரம் தலையாயது. அதனைச் 'சக்கர ராஜம்' (சக்கரங்களுக்குள் அரசன்) எனப் போற்றுகின்றனர். இந்தச் ஸ்ரீ சக்கரத்தில் அனைத்துத் தத்துவங்களும் அடக்கம். இந்தச் ஸ்ரீ சக்கரம் சிவசக்தி ஐக்கிய பாவத்தை உணர்த்தும் யந்திரமாகும்.

பெரும் மகிமை பொருந்திய ஸ்ரீ சக்கரத்தை எம் ஆலயத்தில் வைத்துப் பூஜிப்பது விஷேடமானதும் சிறப்பானதுமாகும். இச் ஸ்ரீ சக்கரம் காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் பேராசிரியர் வான்மீகநாதன் அவர்களால் அமைக்கப்பட்டு அன்பர் திரு.சிவப்பிரகாசம் அவர்களால் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. 1988ம் ஆண்டு வைகாசி மாதப் பௌர்ணமியிலே பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களால் உரிய முறைப்படி அதற்குரிய சகல கிரியைகளும் செய்யப்பெற்று ஆலயத்தில் வைத்துப் பூஜிக்கப்படுகிறது. புவனேஸ்வரி அம்பாளுக்கு உற்சவமும் இடம்பெறுகிறது. அன்றிலிருந்து ஒவ்வொருமாதப் பௌர்ணமி தினத்திலும் ஸ்ரீ சக்கர பூசை சிறப்பாக நடைபெற்று வருகிறது. சாத்வீக குணம் மேலோங்கி நிற்கும் இப் பௌர்ணமி தினத்திலே அடியார்கள் அம்பாளின் அருளைப் பெற்று வருகின்றனர்.

தேவர்களின் துயர் துடைக்கத் தோன்றி அருவமும் உருவமுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாகக் கருணைகூர் முகங்கள் ஆறும் கொண்ட ஆறுமுகசுவாமிக் கடவுளும் இவ்வாலயத்தில் வீற்றிருக்கின்றார். குறிப்பாகக் கந்தசஷ்டித்தினங்கள் ஆறுநாளும் இப்பெருமானுக்குக் கடப்பமிலையினால் சண்முகார்ச்சனை நடைபெற்று வருகின்றது. இவ்விக்கிரகத்தை அமைத்து அருளியவர் திரு.இ.கந்தையா அவர்கள்.

பெரியமுருகன் வள்ளி தெய்வானை விக்கிரகங்கள் இராமலிங்க ஐயர் சுப்பையர் அவர்களால் உபகரிக்கப்பட்டது. சோமாஸ்கந்தர் விக்கிரகம் அளவெட்டி வெள்ளியம்பதி திரு.பொ.வைத்தியலிங்கம் குடும்பத்தினரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இதைத்தவிர இங்கே நான்கு நாயன்மார்களின் உருவச் சிலைகளும் உள்ளன. சுந்தரமூர்த்தி நாயனாரின் உருவச்சிலைஅளவெட்டி சைவ வாலிப சங்கத்தால் உபகரிக்கப்பட்டது. மாணிக்கவாசக சுவாமிகளின் உருவச்சிலை இவ்வூர் அறிஞர்களில் ஒருவராகிய திரு.அ.விஸ்வநாதன் அவர்களால் உபகரிக்கப்பட்டது.

இவ்வாலயத்தில் வருடத்தில் ஏறக்குறைய முந்நூறு நாட்கள் சகஸ்திர நாம அர்ச்சனை நடைபெறுகின்ற பஞ்சமுகப் பிள்ளையார் வீற்றிருக்கின்றார். அபிஷேகங்களின் போதும், வேறு விஷேட தினங்களிலும் ஐம்முகங்களுக்கும் ஐந்து அந்தணப் பெருமக்கள் அறுகு, புஷ்பங்கொண்டு அர்ச்சித்துப் பஞ்சாராத்திகள் காட்டும் காட்சி மிக அற்புதமானதும் பக்திபூர்வமானதுமாகும். வருடத்தில் ஒருமுறை மிக விசேடமான முறையில் உரிய முறைப்படி சுவர்ணபுஷ்ப அர்ச்சனை இப்பெருமானுக்கு இடம் பெறுகிறது. இப்பெருமான் தாமரைப்பூ வடிவில் அமைந்துள்ள பீடத்திலே எழுந்தருளியிருந்தார். ஆலயத்திற்கு வருகின்ற அடியார்கள் முதற்கண் பெருமானின் திருவடியை வணங்கும் பாவனையில் வீற்றிருந்து அருளாட்சி புரிந்தார். இப்பெருமானை அமைத்துக் கொடுத்தவர் திரு.செல்லப்பா குமாரசாமி அவர்கள் தற்பொழுது பஞ்சமுகவிநாயகர் அதற்கென கட்டப்பட்ட அழகிய மண்டபத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளார்.

தேர்த்திருவிழாவின் போது இப்பெருமானுக்கு அர்ச்சனைகள், ஆராதனைகள் இடம் பெற்று இரதத்தில் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். தேர்த்திருவிழாவிலன்று மாலையில் எம் பெருமானுக்குப் ப்ச்சை சாத்தி அலங்கரித்து வரும் கோலம் மெய்சிலிர்த்து உருக வைக்கும் நிகழ்வாக அமையும்.

## சுவரோவியங்கள்

ஆலய உட்பிரகாரச் சுவர்களிலே பல சுவரோவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஆலயங்களிலே சிற்பக் கலைக்கும் ஓவியக் கலைக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவற்றை அமைத்த பெருமை சோழர்களுக்குரியது. சோழர்காலக் கோயில்களும் அதற்குப் பிற்பட்ட கோயில்களும் சிற்ப வேலைகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் இக்கலைகள் அருகிக்கொண்டு வரும் இக்காலத்தில் கும்பழாவளை ஆலயத்தில் 1985ம் ஆண்டு சுவரோவியங்கள் வரையப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

மகாமண்டபத்திலே கீழ்வரும் ஓவியங்களை ஆக்கியுள்ளனர்.

1. யானை பூசித்த சிவலிங்கம், சிலந்தி
2. நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரரின் தோற்றம்
3. சிவனின் தோற்றம்
4. "சுந்தரா உதுபடியோலை மூல ஓலை என்னிடமுள்ளது"
5. செம்மனச் செல்விக்காக மண் சுமந்த திருமேனி
6. தும்பிக்கையான் நம்பிக்கையான் (நம்பி துதித்தமை)
7. ஔவையார் நாவற்பழம் வாங்கிய வரலாறு
8. முருகனின் தோற்றம்
9. கல்லால மரத்தின்கீழ் நான்கு முனிவர்களுக்கும் ஞானம் உரைத்த வரலாறு.
10. மாஇழி திட்டியில் மாருதப் புரவீகவல்லி (பிள்ளையாரைக் கொண்டு வரல்).
11. இளவரசியார் மாருதப்புரவீகவல்லியும் பரிவாரங்களும் மயில்வாகனனார் கனவில் காட்டிய பாதையில்.
12. தம்பி தனக்காக வனத்தணைவோன்.
13. வள்ளியைத் தனக்காக்க வந்த வடிவேல் விருத்தர்.
14. காகமாக வந்து அகத்தியர் கமண்டலம் கவிழ்த்த நிகழ்ச்சி.
15. ஓம் நாம் இருவரும் ஒன்றே.
16. அம்மையும் அப்பனும் அணைத்த விநாயகர்.
17. சிவமுனிவர் பார்வையும் மான் வயிற்றில் வள்ளி கருவுறலும்.
18. புள்ளி மான் வயிற்றில் வள்ளி.
19. புள்ளி மான் ஈன்ற வள்ளி மான்.
20. பெண்ணே கொடிச்சி அதோ பார் பார்.
21. நம்பிராசன் குடிசையும், பாலவள்ளி கிளியுடன் ஆடலும்.
22. வருவோன் புள்ளி மயிலோன் தினைப்புனம் காவலோ தெய்வ மகளோ.
23. சுவாமி கண்டேன் கனி ஒன்று
24. மான்வரக் கண்டதுண்டோ? மான்விழியீர்?
25. தேனும் தினைமாவும்
26. வள்ளியை மணம் புணர வந்த முகம்.

இப்படியான சிறந்த வாசகங்கள் பொறிக்கப்பட்ட ஓவியங்களையும் வாசகங்கள் பொறிக்கப்படாத பல ஓவியங்களையும் இம் மண்டபத்தில் அழகுறத்தீட்டியுள்ளார் இவ்வூர் ஓவிய விற்பன்னர் காலஞ்சென்ற

திரு.சி.பொன்னம்பலம் அவர்கள். இதற்குரிய வர்ணச் செலவை சி.பொன்னுத்துரைச் செட்டியார் அவர்கள் கொடுத்துதவினார். தற்போது இவ்வோவியங்கள் நீக்கப்பட்டுவிட்டன.

உள்வீதிப் பிரகாரத்தில் சுற்றிவர அமைந்துள்ள சுவரில் விநாயகப் பெருமானின் 32 தோற்றங்களையுடைய உருவங்களை ஓவியங்களாக வரைந்துள்ளனர். பாலகணபதி என்ற ஓவியத்தில் ஆரம்பித்து சங்கடஹரா கணபதி என்ற ஓவியத்துடன் இந்த 32 ஓவியங்களும் அழகாகவும் எல்லோரையும் கவரக்கூடியதாகவும் முடிவுறப் பெற்றுள்ளன. இந்த ஓவியங்களை விநாயக அடியார்களின் உபயமாக இவ்வூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சிற்பக் கலைஞர் திரு.செ.சிவப்பிரகாசம் அவர்கள் அமைத்துள்ளார்கள்.

இந்தச் சுவரோவியங்கள் யாவும் செவ்வனே நிறைவேற்றப்பட்டு 1985ம் ஆண்டு சித்திரைத் திங்களில் அந்தணப் பெருமக்களால் தூபதீபங்கள் காட்டி உருக்கொடுத்து, மலரிட்டு வழிபடப்பட்டுள்ளன. அன்றைய தினம் இதற்காக விழாவும் எடுக்கப்பட்டது.

## நந்தவனம்

ஆலயத்தின் வடக்கு பகுதியில் இவ்வாலயத்துக்குரிய நந்தவனம் அமைந்துள்ளது. இங்கு விநாயகப் பெருமானுக்குரிய பத்திரங்களும், புஷ்பங்களும் காணப்படுகின்றன. வன்னி, செண்பகம், மந்தாரை, குருந்து, கடம்பு, நெல்லி, சிவலிங்கப்பூ, வில்வை, மயிர்க்கொன்றை, அலரி, றோசா, மல்லிகை, முல்லை வகைகளும் இன்னும் பல மலர்ச்செடி கொடிவகைகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன. பெருமானின் பூஜைக்கு வேண்டிய போதியளவு புஷ்பங்களும் பத்திரங்களும் இங்கிருந்து பெறப்படுகின்றன. இதன் நடுவே ஒரு அழகிய செங்கழுநீர்த்தடாகமும் அமைந்துள்ளது. இங்கே காணப்படும் இன்னோர் சிறப்பு அநாதியிலே இம் மூல விக்கிரகம் வைத்து வணங்கப்பட்ட இடத்தில் உள்ள மருந்து சாத்திய கல் இன்றும் அவ்விடத்தில் உள்ள வன்னி மரத்தின் கீழ் வைத்துப் பூசிக்கப்படுவதாகும். இந் நந்தவனம் அ.கந்தையா குடும்பத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

## கிணறு

இவ்வாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள கிணற்றின் அமைப்பை நோக்கும்போது பெருமானின் அற்புதம் நன்கு புலப்படும். கனகசபையின் மனைவி பாறுப்பிள்ளை என்பவர் இக்கிணற்றை வெட்டுவித்த போது

தண்ணீரைக் காணவில்லையே என்று ஏங்கி பிள்ளையாரை நொந்து ஆலயத்தில் உண்ணாவிரதமிருந்தார். அதன் பின்பு விநாயகனின் அருளால் அற்புதமாக அடுத்தநாட்காலை கிணற்றில் 9,10 அடி வரையில் நன்னீர் காணப்பட்டது. இக்கிணற்றுநீர் ஆலயச் சுற்றாடலிலுள்ள நீர் நிலையங்களைப் போல் அல்லாது விசேடமாக இன்சுவையும், தெளிவும் உள்ளதாக விளங்குகிறது. இக்கிணற்றை சுப்பராயர் தம்பர் என்பவரது மக்கள் முன்னின்று கட்டுவித்துள்ளனர்.

## மடங்கள்

இவ்வாலயத்தின் வெளி வீதியில் இரு மடாலயங்கள் உள்ளன. கிணற்றுக்கு அண்மித்ததாக உள்ள மடம் ஆதியிலே புன்னர் சின்னப்பு என்பவரால் சிறிதாக அமைக்கப்பட்டுக் கிடுகால் வேயப்பட்டிருந்தது. பின்னர் 1912ம் ஆண்டளவில் அவருடைய மருமகன் கணபதிப்பிள்ளை சேனாதிராசா என்பவர் அந்த மடத்தைப் பெருப்பித்துக் கட்டினார். அதற்குத் தெற்குப் பக்கத்தில் அதை நீட்டி ஒரு அறையும் விறாந்தைகளும் கிணற்றுத் திருப்பணி செய்த அதே தம்பரின் பிள்ளைகளால் கட்டப்பட்டன.

ஆலயவீதியின் வடகிழக்குப் பக்க மூலையில் ஒரு மடம் அதே பரம்பரையைச் சேர்ந்த திருவாளர் சேனாதிராசா இராஜகோபால் அவர்களால் கட்டப்பட்டது. முதலில் அமைக்கப்பட்டிருந்த இம்மடம் ஆலயமுன் மண்டபம் நீட்டப்பட்ட போது தேர் இழுக்க முடியாத காரணத்தால் இடித்துச் சற்று வடக்கே தள்ளித் திரும்பவும் தர்மகர்த்தா சபையால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. முன்னர் இம்மடம் இருந்த காணியும் தேர்க் கொட்டகை அமைந்திருக்கும் காணியும் அவர் மகன் திரு.இ.இராமச்சந்திரன் அவர்களால் உபகரிக்கப்பட்டவை.

இவ்விருமடாலயங்களிலும் அன்னதானம் நடைபெறுவதோடு சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையும் வெகுவிமரிசையாக நடைபெறுகின்றது.

## வெளிவீதியில் அமைந்துள்ளவை

ஆலயத்தின் வடபகுதியில் ஒரு சிறிய வைரவர் கோயில் அமைந்துள்ளது. இது ஒரு கொன்றை மரத்திற்குக் கீழ் அமைந்துள்ளமையால் கொன்றலடி வைரவர் என வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வைரவ மூர்த்திக்குத் தினந்தோறும் காலையில் பூசை நடைபெறும். வைரவப் பெருமானை அடியார்கள் பொங்கல் பொங்கி மடை பரவி வழிபடுவர்.

இவ்வாலயத் தென்கிழக்குப் பகுதியில் உயர்திரு, மயில்வாகனனார் அவர்களின் ஞாபகார்த்த நூல் நிலையமும், தொண்டர்சபைக் காரியாலயமும் அமைந்துள்ளன. நூல் நிலையத்திலே இருக்கின்ற நூல்கள் யாவும் சமயச்சார்புடையவை என்பது குறிப்பிடத்தக்கது. இவை பலரால் அன்பளிப்புச் செய்யப்பட்டவை.

## தீர்த்தக்கேணி

ஆலயத்தின் தெற்குப்பக்க வெளிவீதியில் 1982ம் ஆண்டில் ஆரம்பிக்கப் பெற்ற தீர்த்தக் கேணி 1983ல் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ரூபா செலவில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இதுவும் ஊர்ப்பொதுவாகவே நடைபெற்றது. இதற்குரிய காணியை உபகரித்தவர் திருமதி இராசையா செல்லம்மா அவர்கள். 1984ம் ஆண்டுத் தீர்த்தத் திருவிழாவிலன்று சுவாமி தீர்த்தக் கேணிக்கு எழுந்தருளி வந்து முதன் முதலாகத் தீர்த்தம் ஆடினார்.

இத்தீர்த்தக்கேணியின் மத்தியில் இலங்கையின் எப்பகுதியிலும் காணமுடியாத வியத்தகு நீராழி மண்டபம் ஒன்று சிறந்த சிற்பவேலைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. விநாயகப் பெருமானின் முப்பத்திரண்டு தோற்றங்களில் பதினாறு தோற்ற உருவங்களை அழகான முறையில் இம் மண்டபத்தின் தூபியில் சிற்பங்களாக வடிவமைத்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஒன்பது நதிகள் இத் தீர்த்தத்தில் கலப்பதைக் குறிக்க அந்த நதிகளை (கங்கை, காவேரி, யமுனா, போன்ற நதிகளை) பெண்கள் உருவில் அமைத்து அவர்களின் கரங்களிலேயே இருந்து தீர்த்தம் வடிந்து கொண்டிருக்கின்ற பாவனையில் (தீர்த்தத் திருவிழாவின் போது) அழகாக அமைத்துள்ளார்கள். ஆகாய கங்கையும் பெண் உருவில், வடித்துள்ளனர். இத்தீர்த்தக் கேணியின் நடுவே ஒரு கிணறு வெட்டப்பட்டுள்ளது. இது கேணியை விடச் சற்று ஆழமாகவே வெட்டப்பட்டு அதிலிருந்து தூண்களை அமைத்துக் கட்டியுள்ளனர். சுவாமி தீர்த்தம் ஆடுவதற்கு இந்நீரையே உபயோகப்படுத்துவர். சுவாமி தீர்த்தம் ஆடிய நீர் தான் கேணியில் சங்கமிக்கப்பட்டு அடியார்களுக்குத் தீர்த்தமாக ஆக்கப்படுகிறது. இக் கேணியிலுள்ள நீர் அசுத்தப்படா வண்ணம் அதன் அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்நீராழி மண்டபம் தாமரைப்பூ அமைப்புள்ள மேடையில் அமைந்திருப்பது சொல்லொணா அழகைத் தருவதாகும்.

இவ்வாறாகப் பல சிறப்பு அம்சங்களுடன் கூடிய தீர்த்தக் கேணியும், நீராழி மண்டபமும் எம்பெருமான் ஆலயத்தில்



தீர்த்தக் குளம்

அமைக்கப்பட்டுள்ளமை போற்றுவதற்குரியது. இம் மண்டபத்தை திருமதி.நாகம்மா சோமசுந்தரம் அவர்கள் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் அமைத்து உதவியுள்ளார். ஒவ்வொருமாத சங்கிராந்தித் தினத்தன்றும் சுவாமி தீர்த்தம் ஆடுவதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தீர்த்தக் கேணிக்கு அருகாமையிலுள்ள மண்டபம் சுவாமி தீர்த்தம் ஆடுவதற்கு எழுந்தருளியிருக்கும் மண்டபமாகும். இம் மண்டபத்தில் விக்கினந் தீர்க்கும் விநாயகப் பெருமான் சூரியன் உதிப்பதற்குச் சற்று முன்னே வந்து எழுந்தருளியிருக்க நீராழி மண்டபத்தில் அத்திர தேவரை வைத்து அபிஷேகம் நடைபெறும். இறுதியாகக் கும்பநீரை அபிஷேகம் செய்யும் போது சூரியனின் ஒளி கிழக்கு நோக்கி இருக்கும் எம்பெருமானின் திருவுருவத்திலே பிரகாசிக்கும். கோடி சூரியப் பிரகாசம் போல் எம் பெருமான் பிரகாசமான ஒளியை அடியவர்களுக்கு அளிப்பார். இந்நிகழ்வு உண்மையிலேயே அறியாமையினால் பீடிக்கப்பட்டிருக்கும் அடியவர்களுக்கு அறிவை நல்கி அருளாட்சி செய்கின்ற எம்பெருமானின் கருணைத் திறத்தை உணர்த்துகின்றது என்றால் அது மிகையாகாது. அருளலைக் குறிக்கும் இத் தீர்த்தத்திருவிழாவிலே பெருமானின் அருள்வேண்டி அடியவர்கள் பலர் விடியற் காலையில் வந்து பெருமானின் அருளைப் பெற்றுச் செல்கின்றனர்.

இவ்வாறு எம்பெருமான் எழுந்தருளியிருந்து அடியவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் இம்மண்டபத்தை அமைத்தவர்கள் அளவெட்டியைச் சேர்ந்த திரு.அ.சின்னையா குடும்பத்தினர் ஆவர்.

இத்தீர்த்தக் கேணியின் தெற்குப் பக்கமாக ஒரு முருகன் கோயில் உள்ளது. இக் கோயில் திருமதி.இராசையா செல்லம்மா அவர்களால் கட்டப்பட்டது. நித்திய பூஜை காலையும் மாலையும் அவர்களின் பிள்ளைகளால் செய்விக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாலயத்தைச் சூழ்ந்து மாஞ்சோலைகளும், வேப்ப மரங்களும், முற்பக்கத்தில் தெங்கஞ் சோலைகளும் அமைந்து ஆலயத்தின் இயற்கை அழகைச் சித்தரிக்கின்றன.

# நித்திய பூஜைகள்

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆலயத்திலே நித்திய நைமித்திய பூசைகள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. தினமும் அதிகாலை 4-20 மணிக்குக் கும்பழாவளை விநாயகர் திருப்பள்ளியெழுச்சி ஒலி பெருக்கியில் பாடப்படும். அதனைத் தொடர்ந்து 4.30 மணிக்குப் பெருமானின் கண்டாமணியோசை ஊர் மக்களைத் துயிலெழச் செய்துவிடும். திருப்பள்ளியெழுச்சிபாடி முடிந்தவுடன் சரியாக 5.00 மணிக்கு தேவர்களும் முனிவர்களும் இறைவனைப் பூசித்துத் தியானிக்கின்ற பிரமமுகூர்த்தம் எனப்படும் இப்புனித நேரத்தில் கும்பழாவளை விநாயகப் பெருமானுக்குப் பக்தி சிரத்தையோடு சிறப்பாகப் பூசை நடைபெறுகின்றது. இப்பூசை மிகவும் அற்புதமானது. ஆனந்தமானது. அந்தணப் பெருமக்கள் தமக்குரிய இனிய குரல்வளத்துடன் ஓதுகின்ற மந்திர ஒலிகளும் மலர்க் கரத்தால் மலரெடுத்துப் பெருமானின் பாதங்களிலிடும் அருமையான காட்சியும் விளக்குகளின் ஒளியும், மின் விளக்குகளின் அலங்காரமும், தூபங்களின் நறுமணமும், கர்ப்பூரவாசனையும், தீபங்களின் பிரணவ வடிவமும், மலர்மாலைகளின் அழகும், சுகந்தமும், அழகிய பொன்னிறத்தால் ஆக்கப்பெற்ற திருவாசிகளின் சிறப்பும் இவையெல்லாவற்றின் மத்தியில் அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானின் அழகிய தோற்றமும், பெருமானின் அருட்பார்வையும் வழிபடும் அடியவர்களைக் கவர்ந்து இழுக்கின்றன. இரும்பைக் காந்தம் ஈர்ப்பது போல இப்பூசையின்போது அடியவர்கள் பெருமானின் அருட் சக்தியால் ஈர்க்கப்படுகின்றனர். இரும்புதரு மனத்தை ஈர்த்து ஈர்த்து என்பை உருக்கும் சக்தி வாய்ந்த இவ்வுதய பூசை. "மெய்தானரும்பி விதிர்விதிர்த்து உன் விரையார் கழற்கென் கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம் பொய் தான் தவிர்ந்துனைப் போற்றி சயசய போற்றி எனும் கைதான் நெகிழவிடேன்" என்ற மணிவாசகரின் கூற்றைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது, இவ்வாலயத்திலே குறிப்பாக இந்நேரத்திலே வழிபடுகின்ற அடியார்களின் உணர்ச்சிகளும் மனப்பாங்கும் இத்தகையது எனின் அது மிகையாகாது. அடியார்கள் மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் பெருமானை வணங்கித் தம்மை அர்ப்பணித்து வருகின்ற ஒரு ஆனந்தமான நிலையை அங்கு காணலாம். ஒன்றியிருந்து பெருமானை நினைப்பதற்கும் காண்பதற்கும், மந்திர ஒலிகளைக் கேட்பதற்கும் இவ்வேளைப் பூஜை உகந்ததாயமைகின்றது.

இதனைத் தொடர்ந்தும் முற்பகல் 10.00மணிக்கு உச்சிக்காலப் பூசையும், மாலை 5.30க்கு சாயரட்சைப்பூசையும் நேரம் தவறாது சிறப்பாக நடைபெறும். இரவு 7.00மணிக்கு அர்த்தசாமப்பூசை பாலமுது வைத்து நடைபெறும். இப்பூசைக்குரிய செலவுக்காக மூ.சரவணமுத்து(சரவணைச்சட்டம்பியார்) என்ற விநாயக பக்தர் முதலீடு செய்துள்ளார். உதயப் பூசைக்குரிய பாலமுதுச் செலவும் திரு.வேலுப்பிள்ளை கணநாதன் என்பவரால் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் வருடத்தில் முந்நூறுக்குக் குறையாத அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

## உற்சவங்கள்

இவ்வாலயத்தில் வருடந்தோறும் பல உற்சவங்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. வைகாசி மாதத்தில் வரும் பூரணை (திதிக்குப்) பதினொரு நாட்களுக்கு முன் கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகி பூரணையில் அன்று தீர்த்தம் நடைபெறும். யாழ்ப்பாணத்திலே பிரபல்யமாக நடைபெறும் ஆலய உற்சவங்களிலே இவ்வாலய உற்சவமும் ஒன்றாகும். இங்கே திருவிழாக்கள் வெகுவிமரிசையாக நடைபெறும் கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவிலுள்ள இசைவல்லுநர்களையும், பெரியார்களையும் அழைத்துக் கச்சேரிகள் நிகழ்த்தியும் திருவிழாக்களைச் சிறப்புற நடத்தி வருகிறார்கள்.

இவற்றைவிட மாதந்தோறும் வரும் சதுர்த்திகளில் விஷேட அபிஷேக ஆராதனையுடன் திருவிழா நடைபெறும். ஆனி உத்தரம், நவராத்திரி, சிவராத்திரி ஐப்பசி வெள்ளி, கந்தசஷ்டி, கார்த்திகைத்தீபம், பிள்ளையார் கதை, திருவெம்பாவை, தைப்பூசம், பங்குனி உத்தரம் ஆகிய விஷேட தினங்களும் இங்கு சிறப்பாகக் கொண்டாடப் பெறுவது போற்றத்தக்கது. நாவலர் பெருமான் காலந்தொடக்கம் வருடந்தோறும் கந்த புராணம் படிக்கப்படுகின்றது. பங்குனி உத்தர தினத்துக்கு சில நாட்களுக்கு முன் ஆரம்பமாகி உத்தரத்தினத்தன்று சுவாமி கலியாணப்படிப்பு நடைபெறும். திருவிழா தொடங்க நான்கு ஐந்து நாட்களுக்கு முன் நல்ல ஒரு சுபதினத்தில் வள்ளியம்மை திருக்கல்யாணத்தோடு படிப்பு முடிவடையும். படிப்புக்கு பல உபயங்கள் உண்டு. திருவெம்பாவைக் காலத்தில் திருவாதவூரடிகள் புராணம்

படிக்கப்படும். புராணப்படிப்பின் போது சிறப்பான படிப்புகளுக்கே இருபத்தெட்டு உபயகாரர்கள் இருப்பது புராணபடனம் நடைபெறுவதற்கு வழிசெய்வதொன்றாகும். கந்தபுராணம் முழுவதும் புராணபடனமாக நடைபெறுவது (அறுபது நாட்கள்) வழமையாகும்.

## ஆலய பூசகர்

இவ்வாறாக பூசைகளும், உற்சவங்களும் சிறப்புற நடைபெறுவதற்கும் ஆலயம் பெருமையுறத் திகழ்வதற்கும் ஆலயப் பூசகர்களின் பங்கு என்றென்றும் போற்றுவதற்குரியது. ஆதியில் இராமலிங்கையர் என்னும் பிராமண உத்தமராலும், பின் அவர் மகன் சுப்பையர் அவர்களாலும் பூசைகள் கிரமமாகச் செய்யப்பட்டு வந்தன. சுப்பையர் உண்மையாக ஒரு விநாயக பக்தர். பூசை செய்யுமுன் நீராடி பூங்கொல்லையில் பூவெடுத்துக்கொண்டு வரும்போது மணியடித்துக் கொண்டு வருவார். யாராவது அவர் உடம்பைத் தீண்டிவிட்டால், திரும்பவும் நீராடிய பின்பே பூசை செய்வார். இவ்வாறு மிகப் புனிதமான பக்தியோடு பூசை செய்தவர். இவ்வாறாகப் பூசகர் பயபக்தியோடு பூசை செய்து வந்த இக்காலத்தில் பெருமானின் திருவருள் சுரந்து கொண்டிருந்தது. அக்காலத்தில் தான் பெருமானின் திருவருளைப் பெற்ற இப்பக்தர் மனம் வருந்தியதாலேயே பச்சை இளநீரை செவ்விளநீர் ஆக்கினார். ஒரு முறை இவருக்கும் கோயில் மணியகாரனுக்கும் இடையில் வழக்கு நடந்தது. வழக்கில் இவருக்குச் சிறைத்தண்டனை வழங்கப்படுமென எல்லோரும் எதிர்பார்த்தனர். வழக்குத் தினத்தன்று இவரைக் கோட்டுக்கு அழைத்துச் செல்லப்போனபோது இவரைக் காணவில்லை. தற்கொலை செய்துகொண்டாரோ என யோசித்துக் கொண்டு கோவிலைத் திறந்து பார்த்தபோது ஆதிமூல மூர்த்தியை இவர் தழுவிய வண்ணம் கண்ணீர் மல்கத் தியானத்தில் மூழ்கி இருப்பதைக் கண்டனர். பின் இவரைக் கோட்டுக்கு அழைத்துச் சென்றனர். அங்கே வழக்கு நீதவானால் தள்ளுபடி செய்யப்பட்டது. இவருக்கும் ஆண்பிள்ளைகள் இல்லை. இவருக்குப்பின் இவரது மகளுக்கு பூசை உரித்து வழங்கப்பட்டது. இவரது மருமகன் (2) சோமசுந்தர ஐயராலும் அதன்பின் அன்னாரின் புத்திரர்கள் கணபதீஸ்வரசர்மா, வைரவநாதக்குருக்கள், வெங்கடேஸ்வரக் குருக்கள், இராமலிங்க ஐயர், சண்முக சுந்தர ஐயர், தியாகராசா ஐயர் ஆகியோராலும் ஆலயப் பூசைகள் விழாக்கள் நடாத்தப்பட்டு வந்தன. தூய்மையும், காலக்கிரமமும், சாஸ்திர அமைவும், அன்பும், முகமலர்வும் திகழ

பெருமதிப்பிற்குரிய சோ.வெங்கடேஸ்வரக் குருக்களின் நிர்வாகம் அடியார்கள் பக்தர்கள் மதிக்க நிகழ்ந்தது. அன்னாரின் நிர்வாகத்தின் கீழ் அவரின் தம்பியார் இராமலிங்க ஐயரின் புதல்வர்கள் இவ்வாலயப் பூசைகளை எவ்வித குறைகளுமின்றி வெகு சிறப்பான முறையில் நடத்தி வருவது எல்லோராலும் மதிக்கப்படுவதும் போற்றப்படுவதுமாகும். இவர்கள் பூசை நேரங்களில் கடைப்பிடிக்கும் ஒழுங்குமுறையும், சரியான மந்திர உட்சாடணங்களும், அடியார் மனதைக் கவர்ந்துள்ளன. இவ் அந்தணப் பெருமக்களின் பூசை முறையின் முக்கியத்துவமே இவ்வாலயம் சிறப்புற அமைவதற்கும், அடியார்கள் பக்தர்களாக வருவதற்கும் காரணமாக அமைகின்றது.

## அடியார் சிறப்பு

இவ்வூர் அடியார்களின் நிலையை நோக்கும்போது அதிசயிக்கக்கூடிய செயல்களை அவர்கள் ஆற்றுகின்றனர். இவ்வாலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு கருமமும் எவ்வித வேதனமும் இல்லாமல், கொம்பன் திருவருளொன்றையே விரும்பி, முடுக்கிவிட்ட எந்திரம் போலப் பூசைக்கு ஆலயமணி கேட்டதும் திருவிளக்கேற்றுதல் முதற்கொண்டு எல்லாச்செயல்களும் கிரமந்தவறாமல் நேரந்தவறாமல் சிறப்பாக நடைபெறுவது மிகவும் பெருமைப்படக்கூடியது ஒன்றாகும்.

"நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு புலர்வதன் முன் அலகிட்டு பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி" வணங்கும் பேற்றைப் பெற்ற அடியார்கள் பலர் இங்கு உள்ளனர். இவர்கள் அதிகாலையில் வந்து ஆலயத்தை அலகிட்டுச் சுத்தம் செய்து ஆலயத்திலே விளங்குகின்ற விக்கிரகங்கள் எல்லாவற்றுக்கும் தினமும் பூமாலைகள் கொணர்ந்து வழிபாடாற்றுதல் சிறப்பம்சமாகும்.

"வானந்துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையும்
தானந்துளங்கித் தலைதடுமாறிலென் தண்கடலும்
மீன்பாடிலென் விரிசுடர்வீழிலென் வேலை நஞ்சுண்டுன
மொன்றில்லா ஒருவனுக்காட்பட்ட உத்தமர்க்கே"

என்ற அப்பர் பெருமானின் மனவுறுதியையும், பக்தி வைராக்கியத்தையும் இவ்வடியார்கள் கடைப்பிடித்து வருகின்றார்கள். வானம் இடிந்தாலென்ன, மழைபொழிந்தாலென்ன, புயற் காற்று வீசினாலென்ன, எது எப்படியிருப்பினும்

இவ்வடியார்கள் பெருமானுக்குச் செய்யும் தொண்டுகளையே சிரமேற்கொண்டு அவற்றைத் தவறாது செய்து வருவது பெருமைக்குரியதாகும். இத்தகைய தொண்டர்களின் அயராத தொண்டுகளினாலும் இவ் ஆலயம் புனிதமும் பெருமையும் பெற்று விளங்குகின்றது. வெள்ளிக் கிழமைதோறும் மாலையில் பஜனைக் கோஷ்டியினர் பக்திப்பாடல்களைப் பத்தி சிரத்தையுடன் பாடி வருகின்றனர்.

## தொண்டர் சபை

கும்பழாவளை தர்மகர்த்தா சபையின் சார்பாக காலஞ்சென்ற திரு.இ.முருகேசு ஆசிரியர், உயதர்திரு.செ.மயில்வாகனம் ஆசிரியர் ஆகியோர் தொண்டர் சபை ஒன்றின் அவசியத்தை உணர்ந்து 1956ம் ஆண்டு இலங்கையில் முதன் முதலாக இவ்வாலயத்தில் தொண்டர் சபையை நிறுவினார்கள். இச்சபை தர்மகர்த்தா சபையின் கீழ் அவர்களின் மேற்பார்வையில் இயங்கும் ஒரு சபையாகும். இச்சபையில் இவ்வூர் இளைஞர்கள் இருநூறுபேர் அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்கள் மாதந்தோறும் ஆலயத்தில் சைவப்பிரசங்கம் செய்வதற்குச் சைவப்பெரியார்களை ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றனர். இதைவிடத் திருவெம்பாவை, நவராத்திரி, ஐப்பசிவெள்ளி, விநாயகசதுர்த்தி, சிவராத்திரி போன்ற விழாக்காலங்களில் நல்ல சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்கள், தேவாரப்பண் கச்சேரிகள், சங்கீதக்கச்சேரி, வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றனர். திருவெம்பாவைக் காலத்தில் திருப்பள்ளியெழுச்சி பாடுதல், ஆலயத்தின் வருட உற்சவ காலத்தில், வீதிகள் பெருக்கி, புதுமணல் பரப்பி நீர் தெளித்துக் குளிரவைத்தல், பஜனைகள் செய்தல், வழிபாடு நிகழ்த்துவோர் சார்பில் களவுகள் நிகழாது பாதுகாத்தல், தேர் உற்சவத்திலன்று அன்னதானம் சிறப்பாக நடைபெற உதவுதல் போன்ற சீரிய தொண்டுகளை இத்தொண்டர்கள் செய்துவருகின்றனர். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற பெருநோக்கை இத்தொண்டர்கள் மனதிற்கொண்டு சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது பண்ணிசை வகுப்பும், மிருதங்க வகுப்பும் தொடங்கியுள்ளனர். சிறார்கள் பண்ணோடமையப் பாடல்களை பாடிப் பரவுவதற்கு இவை பெருந்துணையாக அமையும். இவ்வாலயத் தொண்டர்களாக இருந்தவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெருமானின் திருவருளால் சிறப்புற வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள்

உதவிய ஒரு தொகைப்பணம் தொண்டர் சபையினால் தர்மகர்த்தா சபையிடம் முதலீடாக வைக்கப்பட்டுள்ளது. அவ்வட்டி வருடந்தோறும் ஆலயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இத்தொண்டர் சபை இயக்குநராகவும் அச்சாணியாகவும் இருந்து வெறுவினையாகத் தொண்டாற்றி ஆலயத்தை மேம்பாடடையச் செய்தவர் அண்மையிற் காலஞ் சென்ற விநாயகதாசரும், சைவப்பெரியாரும், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டவருமாகிய பெரியார் திரு.செல்லப்பா மயில்வாகனம் அவர்கள்." அவர் கும்பழாவளை விநாயகராலயத்தின் தர்மகர்த்தாசபை தொண்டர்சபை ஆகியவற்றின் முதல்வராக இருந்து பல தொண்டுகள் ஆற்றி ஆலயத்தின் உன்னத வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். அன்னாரும், அவருடன் தோளோடு தோள் நின்று உழைத்த ஏனைய நிர்வாகஸ்தர்களும் தர்மகர்த்தா சபை ஆரம்பித்த காலந்தொட்டு அரும் பெரும் பணிகள் ஆற்றியுள்ளனர். அன்னார் தர்மகர்த்தா சபைத் தலைவராக இருந்து ஆற்றிய பணிகள் இன்றும் அவரை நினைவு கூரச்செய்கின்றன. வானத்தை அளாவி நிற்கும் எழில்மிகு இராஜகோபுரம், விசாலத்துடனும் ஒய்யாரத்துடனும் வந்தோரை வரவேற்கும் ஆலய முன்மண்டபம் வாயிலில் நுழைந்தால் வண்ணமிகு பஞ்சமுக விநாயகர், கலைத்திறன் மிக்க தேர்முட்டி, பிரமாண்டமான தோற்றத்துடன் காட்சியளிக்கும் தேர்க்கொட்டகை அழகிய கலைக்கு அரணாக அமைந்த தீர்த்தக்குளம், பிள்ளையார்வீதி, ஆலயத்தின் மின்னிணைப்பு, விசாலமான வீதி அமைப்பு, காரியாலயக் கட்டிடம், களஞ்சிய அறை, தண்ணீர்த்தொட்டி ஆகியன குறிப்பிடத்தக்கன. ஒரு கையிலே பிரம்பு, மறுகையிலே திறப்புக்கோவை அடங்கிய பை, தோளிலே சால்வை, காலிலே செருப்பு, வழுக்கைத்தலை, நீண்ட நரைத்த தாடியைத் தடவிக்கொண்டு ஆடி ஆடி ஆலய வீதியிலே வந்து கொண்டிருக்கும் அழகிய தோற்றம் என்பன அப்பெருந்தகையை நினைவு கூரச்செய்யும் சின்னங்களாக அமைந்துள்ளன.

## காணிக்கைப் பொருட்களும் ஆதனங்களும்

இவ்வாலயம் சிறப்புற விளங்க பல தொண்டர்களால் பல காணிக்கைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. பல பொன்னாபரணங்கள், வெள்ளி ஆபரணங்கள், பல வாகனங்கள், மூன்று கேடகங்கள், திருவூஞ்சல்,

திருவாசிகள் என்பவற்றை மனமுவந்து அடியார்கள் காணிக்கைப்பொருட்களாக அளித்துள்ளனர். வயற்காணிகளும் தோட்டக்காணிகளும், பனந்தோப்புக்களும் இவ்வாலயத்திற்கு ஆதனங்களாக உள்ளன. இவற்றைவிடப் பல மூலதனங்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளன. உபயகாரரின் பணத்தை முதலீடு செய்து வரும் வட்டியிலிருந்து உபயங்கள் செய்யப்படுகின்றன. ஆலயத்தின் மின்சார சேவைக்கு திருமதி.செல்வவிநாயகமூர்த்தியின் பெயரால் அவரின் பிள்ளைகள் ஐம்பதாயிரம் ரூபா முதலீடு செய்துள்ளார்கள். அதிற் பெறப்படும் வட்டியே மின்சாரக் கட்டணத்திற்கு உபயோகிக்கப்படுகின்றது. இதில் மிகுதி அசையா மணியில் ஏற்படும் பிழைகளைத் திருத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

## நூல்

மெய்யடியார்கள் பலர் தம் அன்பு முதிர்ச்சியால் காலத்துக்குக் காலம் விநாயகப் பெருமான்மேல் பல தோத்திரப்பாடல்களை யாத்துள்ளனர். அவை அருட்பாடல்களே என்பது படிப்போர்க்கு வெள்ளிடைமலை. பக்தர் பலர் அவற்றை மனனஞ் செய்து நாடோறும் பாராயணம் செய்து வரும் வழக்கமுடையர். பரநிருபசிங்கத்தார், திரு.கதிரித்தம்பி போன்ற பல விநாயக அடியார்களின் பாடல்களை ஒருங்கு திரட்டிக் "கும்பழாவளை விநாயகர் தோத்திரப் பிரபந்தத் திரட்டு" என்ற நூலை முதலாம் பதிப்பாக திரு.க.வே.கந்தையாப்பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இந்நூற்பயன் சொல்ல முடியாதது. அனுபவித்து அறிய வேண்டியதே. இரண்டாம் பதிப்பாக தொண்டர் சபையினால் பதிப்பிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வண்ணம் அளவையம்பதியிலே மாருதப்புரவீகவல்லியின் காலம் முதல் இன்றுவரை கும்பழாவளை ஆலயம் விநாயகரருளினால் மிக உன்னதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இத்தகைய மகோன்னத நிலைக்கும் பெருமானின் பேரருளும், அந்தணப் பெருமக்களின் ஒத்துழைப்பும், அடியார்களின் தொண்டும், பக்தியும், அன்பளிப்புக்களும், தர்மகர்த்தா சபையினரதும் தொண்டர்சபையினரதும் அளப்பரிய தொண்டுகளும், இயற்கை அமைப்புகளும், ஏனைய பல அமைப்புகளும் ஏதுவாக அமைந்துள்ளனவென்றால் அது மிகையாகாது. மென்மேலும் இவ்வாலயம் வளர்ச்சி பெறுவதற்கு எல்லாம் வல்ல கும்பழாவளை விநாயகப்பெருமான் அருள்பாலிப்பாராக!

# வழக்கு விபரம்

## மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

வழக்கு இல: **T.R.74/A**

1. சிற்றம்பலம் சின்னத்தம்பி.
2. வயிரமுத்து முருகேசு.
3. ஐயம்பிள்ளை இளையதம்பி
4. தில்லையம்பலம் பொன்னையா.
5. செல்லப்பா பொன்னையா
6. S.மூத்ததம்பி கந்தையா
7. தம்பர் சரவணமுத்து
8. வீரசிங்கம் நாகலிங்கம்
9. நல்லதம்பி செல்வவிநாயகமூர்த்தி
10. இராசமுத்தையா அம்பலவாணர்.
11. சரவணமுத்து பொன்னம்பலம்
12. நற்சிங்கர் சின்னத்தம்பி.
13. சின்னத்தம்பி செட்டியார், கந்தையா செட்டியார்.
14. மூத்ததம்பி இளையதம்பி.
15. சரவணமுத்து சிதம்பரப்பிள்ளை.
16. சந்திரவர் சிதம்பரப்பிள்ளை.
17. தம்பர் சின்னப்பு.
18. குமாரர் வல்லிபுரம்.
19. அப்புக்குட்டியர் ஐயாத்துரை.
20. வேலாயுதர் நன்னித்தம்பி கந்தையா

எல்லோரும் யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சேர்ந்தவர்கள் வழக்காளிகள்.

எதிராக

1. மாணிக்கவாசக ஐயர் சோமசுந்தர ஐயர்.
2. சந்திரவர் கதிரித்தம்பி.
3. வயிரமுத்து இராசதுங்கம்.

4. A.M.கணபதிப்பிள்ளை
5. சோமசுந்தர ஐயர் வெங்கடேச ஐயர்.
6. சோமசுந்தர ஐயர் இராமலிங்கம் ஐயர்.
7. அப்பாத்துரை ஐயர் முத்துச்சாமி ஐயர்.
8. நாகம்மா, சோமசுந்தர ஐயர் (மனைவியும் - சுப்பையா மகளும்.)
9. தம்பர் நாகலிங்கம்பிள்ளை.
10. அருணாசலம் சரவணமுத்து.

-எதிராளிகள்.

ஐ.நு.டி.க
22/6/48

1. சோமசுந்தர குருக்கள் கணபதி ஐயர்.
2. சோமசுந்தர குருக்கள் வயிரவநாத குருக்கள்.
3. சோமசுந்தர குருக்கள் சண்முகசுந்தர ஐயர்.
4. சோமசுந்தர குருக்கள் தியாகராஜ ஐயர்.

-சேர்க்கப்பட்ட எதிராளிகள்.

இந்த வழக்கு, யாழ் மாவட்ட நீதிபதி திரு.R.R.செல்வத்துரை அவர்களின் முன், வழக்காளிகளின் சட்டத்தரணி S.குமாரசூரியரின் அநுசரணையுடன் அப்புக்காத்து S.R.கனகநாயகம் வன்னியசிங்கம் ஆகியோர் முன்னிலையிலும், இரண்டாம் எதிராளியின் சட்டத்தரணி V.இளையதம்பி மூன்றாம், நான்காம் எதிராளிகளின் சட்டத்தரணி நவரத்தினராஜா, ஐந்தாம், ஆறாம் எட்டாம் எதிராளியின் சட்டத்தரணி S.T.நடராஜாவின் அநுசரனையுடன், அப்புக்காத்து திரு.குலசிங்கம் ஆகியோர் முன்னிலையிலும், இறுதித் தீர்ப்பிற்காக வருகின்றது.

1. கும்பழாவளையென அழைக்கப்படும் காணியில் அமைந்துள்ளதும் மூன்றாம் பிரதிவாதியின் கூற்றின் பிரகாரம் கும்பழாவளைப் பதியென அழைக்கப்படுவதுமான கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலும், அதற்குரிய ஏனையவைகளும், சொத்துக்களும், சம்மதத்திற்கமைய, 1917ம் ஆண்டில் நம்பிக்கைப் பொறுப்புக்கட்டளைச்சட்டம் இல.9க்கு அமைய ஒரு இந்து, பொது சமய நம்பிக்கைச் சொத்தாக தீர்க்கப்பட்டு கட்டளையிடப்படுகிறது.

2. ஐந்தாம், ஆறாம் எதிராளிகளும், முதலாவது தொடக்கம் நான்காவது சேர்த்துக்கொள்ளப்பட்ட எதிராளிகளும், இக் கோவிலின் பரம்பரையாக கடமையாற்றும் பிராமண பூசகர்களாக இருப்பதற்கு உரித்துடையவர்களென பிரகடனப்படுத்தப்பட்டு, அவ்வாறு பணிபுரியலாமென மேலும் கட்டளையிடப்பட்டு தீர்க்கப்படுகிறது.

3. கோவிலுக்கு அல்லது அதன் தெய்வத்திற்கு காணிகள் நன்கொடை அளிப்பவர்கள், அவர்கள் உயிரோடு இருக்கும் பொழுதும், அவர்களுக்குப் பின் அவர்களின் ஆண் சந்ததியினர், குறித்த கோவிலின் வழிபாட்டுக்காரராகவும், இதன் பின்னால் விவரிக்கப்படும் உபயகாரரெனக் கூறப்படும் ஏனைய வழிபாட்டுக்காரரும், வருடந்தோறும் ரூ.2, சந்தாப்பணமாகச் செலுத்துவதன் மூலம் அமைந்து, தர்மகர்த்தாக்களைத் தெரிவு செய்யும் நோக்கத்திற்காக, தங்கள் பெயர்களைத் தேர்தல் டாப்பில் சேர்த்துக் கொள்ள, உரித்துடையவர்களென மேலும் கட்டளையிடப்பட்டு தீர்க்கப்படுகின்றது.

4. அளவெட்டியைச் சேர்ந்த காசிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை, விசுவநாதர் நாகராஜா, இராமுப்பிள்ளை முருகேசு ஆகிய மூவரும் சேர்ந்து ஓர் இடைக்கால தர்மகர்த்தாக்கள் சபையாக அமைவதோடு, 1948 ஐப்பசி மாதத்தில் தர்மகர்த்தாக்கள் சபை தெரிவு செய்யப்படும்வரை, கோவிலையும், அதன் அசைவற்ற, அசைவுள்ள சொத்துக்களையும் உடனடியாகப் பொறுப்பேற்று உடமையாக்கிக் கொள்ள வேண்டும்.

5. மேற்கூறப்பட்டவர்களைக் கொண்ட ஓர் தேர்தல் டாப்பைத் தயாரிப்பதும், அதை கோவில் சுற்றாடலில் ஓர் பிரசித்தமான இடத்தில் வைப்பதும், அந்த டாப்பில் காணப்படுவோரை, 1948 ஐப்பசி மாதத்தில் தர்மகர்த்தாக்களைத் தெரிவு செய்யும் நோக்கத்திற்காக நடைபெறவுள்ள கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு அழைப்பதும் அவர்கள் கடமையாகும்.

6. வருடாந்த திருவிழாக்களை நடாத்துபவர்கள், விஷேச பூஜைகள், விஷேச சமயக் கோட்பாடுகளுக்கமைய, ஏனைய உற்சவங்களை நடாத்துபவர்களாகிய, இக்கோவில் வழிபாட்டுக்காரர் ஆகியோர், இக் கோவிலின் உபயகாரர் ஆவர்.

7. தர்மகர்த்தாக்கள் சபை தேர்தல் டாப்பில் அடங்கி உள்ளோரால் தெரிவு செய்யப்பட்ட ஏழுபேரைக் கொண்டு, ஐந்து வருடங்களுக்கு பதவி வகிப்பதோடு, கோவிலையும் அதன் சொத்துக்களையும் உடமையாக்கி முகாமைத்துவம் செய்து, இதன் கீழ் வரையப்பட்டுள்ள முகாமைத்துவத் திட்டத்திற்கமைய கட்டுப்படுத்த வேண்டும்.

8. ஒரு தர்மகர்த்தா, ஐந்து வருடங்கள் கொண்ட மேலும் இரு காலங்களுக்கு மட்டும் மறு தெரிவுக்கு தகுதியுடையவராவார்.

9. அளவெட்டியில் அமைந்திருப்பதும், கோவிலுக்குச் சொந்தமானதும், 16 நெ.ப. விஸ்தீரணம் கொண்டதுமான "சித்திரை வயல்" என்னும் காணியை, 2ம் எதிராளி உடமையாக்கி, விவசாயஞ்செய்ய, ஆயுட்கால உரித்துடையவர். தர்மகர்த்தாக்கள் சபையிடமோ அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட வேறொருவரிடமோ, 1949 சித்திரை மாதத்திலிருந்து வருடந்தோறும் சித்திரை மாதத்தில் 6 புசல் நெல்லை அவர் ஒப்படைக்க வேண்டும். இவ்வுரிமை பரிமாற்றஞ் செய்ய முடியாததும், அவரின் உரித்தாளர்களையோ அல்லது பின்வருபவர்களையோ சாராததுமாகும்.

10. மேற்கூறியவற்றிற்கமைய, கோவிலும் அதன் அசைவுள்ள, அசைவற்ற சொத்துக்கள் யாவும், 1948 ஐப்பசி மாதத்தில் ஏழு பேர் கொண்ட முதற் சபை தெரிவு செய்யப்படும் வரை, இடைக்கால தர்மகர்த்தாக்கள் சபையின் பொறுப்பில் இருக்கும். அதன் பின் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை தெரிவு செய்யப்பட்டு வரும் தர்மகர்த்தாக்கள் சபையின் பொறுப்பில் இருப்பதோடு, அச் சபைகள் தத்தம் பதவிக்காலத்திற்கான பொறுப்புரிமைக் கட்டளைகளுக்கு உரித்துடையவையாகவுமிருக்கும்.

11. கீழே கொடுக்கப்பட்டுள்ள முகாமைத் திட்டத்திற்கமைய, இக் கோவில் நடவடிக்கைகள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டு தீர்க்கப்படுகின்றது.

12. இவ் வழக்கிற்கான செலவு தொகை எதுவுமில்லையென மேலும் கட்டளையிடப்பட்டு தீர்க்கப்படுகிறது.

## முகாமைத்துவ திட்டம்

1. இத்திகதியிலிருந்து கோவிலையும், அதன் அசைவற்ற, அசைவுள்ள சொத்துக்கள் யாவற்றையும், இடைக்காலத் தர்மகர்த்தாக்கள் சபை உடைமையாக்குவதோடு, கோவிலின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி, முகாமைத்துவஞ் செய்து, இக் கோவிலின் பாரம்பரியம், உபயோகம் ஆகியவற்றின் பிரகாரம், பிராமண பூசகர்களுக்கு உரிமையானவற்றைத் தவிர, எல்லா வருமானத்தையும் சேகரிக்கும்.

2. உதாரணமாக அர்ச்சனை, அபிஷேகம், தட்சணை, அரிசி-தானியங்கள், பழங்கள், காவடி வருமானங்கள் தவிர்ந்த ஏனைய வருமானத்தைச் சேகரித்து, கோவிலுக்குள் நடைபெறும் வைபவங்கள், கிரியைகள், பூசைகள் ஆகியவற்றின் செலவுகள் தவிர்ந்த ஏனைய செலவுகள் யாவற்றையும், 1948 ஐப்பசி மாதத்தில் புதிய தர்மகர்த்தாக்கள் சபை தெரிவாகும்வரை, ஏற்று நடாத்தப்பட வேண்டும்.

3. தீர்ப்பில் கூறப்பட்டதற்கமைய தேர்தல் டாப்பைத் தயாரித்து ஒரு வாரத்திற்கு முன்பே, கோவில் அறிவித்தல் பலகையில் அறிவித்தலை ஒட்டுவதன் மூலமும், அங்கத்தவர்களுக்கு தபால் அட்டையில் அறிவித்தலை அனுப்புவதன் மூலமும், வாக்காளரின் கூட்டத்தைக் கூட்டுவது இடைக்கால தர்மகர்த்தாக்கள் சபையின் கடமையாகும்.

4. அக் கூட்டங்களில், பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட தர்மகர்த்தாக்கள் சபை, தெரிவிக்குப் பின் உடனடியாகப் பதவி ஏற்பதோடு ஐந்து வருட காலத்திற்கு பதவியிலிருக்கலாம்.

5. மேற்கூறிய பாரம்பரியம், உபயோகம் ஆகியவற்றிற்கமைவான பரம்பரைப் பூசகர்களுக்கு உரித்தான வருமானத்தைத் தவிர, ஏனைய வருமானங்கள் யாவற்றையும் சேகரித்து எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொள்வது அவர்கள் கடமையாகும்.

6. தர்மகர்த்தாக்கள் சபை, வருடாவருடம் ஒரு தலைவர், ஒரு காரியதரிசி, ஒரு தனாதிகாரி ஆகியோரை அவர்களுக்குள் தெரிவு செய்யலாம்.

7. உறுதிகள், தஸ்தாவேஜுகள், விஷேச பொதுக்கூட்டங்கள், தர்மகர்த்தாக்கள் சபைக் கூட்டங்கள் ஆகியவற்றின் அறிக்கைகள், கடிதப் போக்குவரத்து ஆகியவற்றிற்கு காரியதரிசி பொறுப்பாக இருப்பார்.

8. முன்னர் கூறியபடி, பூசகர்களின் நலன்களுக்காக ஒதுக்கப்பட்ட வருமானத்தைத் தவிர ஏனைய வருமானங்கள், சமர்ப்பணங்கள், சேகரிப்புக்கள், நன்கொடைகள், பணம், செலவு விவரங்கள் ஆகியவற்றிற்கு தனாதிகாரி பொறுப்பாக இருப்பார்.

9. தனாதிகாரியூடாக ஒரு கணக்குப் புத்தக ஒழுங்கைப் பேணுவதோடு

அக் கணக்குகளை வருடாந்தம் பரிசோதித்து, அவ்வறிக்கையை கோவில் சுற்றாடலில் உள்ள விளம்பரப்பலகையில் ஒட்டி விடுவதும் இடைக்கால தர்மகர்த்தாக்கள் சபை, தர்மகர்த்தாக்கள் சபையின் கடமையாகும்.

10. கோவிலின் நலன்களுக்கான அத்தியாவசியப் பிரயாணச் செலவுகளைத் தவிர, தர்மகர்த்தாக்கள் சபையின் எந்தவொரு அங்கத்தவர்க்கும் வேதனமெதுவும் கொடுபடாது.

11. காரியதரிசியால் கொடுபடும் மூன்று நாள் அறிவித்தலின் பின், குறைந்தபட்சம் மாதமொருமுறை தர்மகர்த்தாக்கள் சபை கூடும்.

12. கூட்டம் கூடுவதற்கு, குறைந்தபட்சம், ஐந்து நாட்கள் முன்பு, எழுத்தில், அவ்வாறான கூட்டத்திற்குரிய அறிவித்தலைக் கொடுக்குமாறு காரியதரிசியைக் கேட்டுக் கொண்டதன் பின், சபையின் ஒரு கூட்டத்தைக் கூட்ட, தர்மகர்த்தாக்கள் சபையின் எந்தவொரு அங்கத்தவரும் உரிமை உடையவராவர்.

13. தர்மகர்த்தாக்கள் சபை, தனித்தும் ஒருமித்தும் கோவிலின் எல்லா விஷயங்களையும் கவனிப்பதோடு, எல்லா முக்கிய நேரங்களிலும் கோவிலில் நடைபெறுவன யாவற்றையும் நேரடியாக மேற்பார்வை செய்ய வேண்டும்.

14. பரம்பரைப் பூசகர்கள் கோவில் பூசைகளையும் மற்றும் குருத்துவ வைபவங்களையும், தர்மகர்த்தாக்களின் பணிப்புக்கமைய செய்ய வேண்டும்.

15. நாளாந்தம் குறைந்த பட்சம் மூன்று பூசைகளுக்கு தேவையான பொருள்களை தாமாகவே செலவு செய்து பூசைகளை நடாத்தி, கோவிலின் பாரம்பரியத்தையும் வழமையையும் அவர்கள் பேண வேண்டும்.

16. ஒரு பரம்பரைப் பூசகரின் ஒழுக்கம் திருப்திகரமற்றதாகக் காணப்படும் பட்சத்தில் அவரை நீக்குவதற்கான மனுவை தர்மகர்த்தாக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

17. தர்மகர்த்தாக்கள் சபை, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு வங்கியில், கும்பழாவளைப் பிள்ளையார் கேவிலின் பெயரால் ஒரு கணக்கைத் திறந்து, சாதாரண நடைமுறைக்குத் தேவையான செலவுகளை சமாளிக்கும்

நோக்குடன் நூறு(100/=) ரூபாய்க்கு மேற்படாத ஒரு தொகையை தனாதிகாரி மூலம் தர்மகர்த்தாக்கள் சபை கையில் வைத்திருப்பதை விட ஏனைய வருமானங்கள், நன்கொடைகள் பெற்றாலும், சேகரித்தாலும் அவற்றை அக் கணக்கில் போட வேண்டும்.

18. தலைவர், தனாதிகாரி, தலைவர் இல்லாதவிடத்து, தலைவரின் சார்பில் வேறொரு அங்கத்தவர், தனாதிகாரி ஆகிய இருவரும் கையொப்பமிட்ட காசோலைகள் மூலம், தர்மகர்த்தாக்கள் சபையின் தீர்மானத்திற்கு அமைவான செலவுகளுக்காக, வங்கியில் போட்ட பணங்களை, தர்மகர்த்தாக்கள் சபை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தனாதிகாரி இல்லாதவிடத்து, தலைவரும், தனாதிகாரிக்காக காரியதரிசியும் கையொப்பமிடலாம்.

19. தர்மகர்த்தாக்கள் சபை, தங்களின் விருப்பத்தின்படி ஒன்று அல்லது அதற்கு மேலும் உண்டியல்களைப் பாதுகாப்போடு வைத்து, குறைந்த பட்சம், தர்மகர்த்தாக்கள் சபையின் மூன்று அங்கத்தவர்கள் முன் மாதத்தில் ஒரு முறை திறந்து, அவற்றில் உள்ள பணத்தை எடுத்து வங்கியிலிட வேண்டும்.

20. குறித்த கோவிலுக்குச் சொந்தமான காணிகளின் சரியானதும், உண்மையானதுமான விவரங்களை, அவற்றின் விஸ்தீரணம், இடம், எல்லைகள் ஆகியவற்றை உள்ளடக்கி, அசைவுள்ள சொத்துக்களின் விவரங்களோடு தயாரித்து, தர்மகர்த்தாக்கள் சபையினர் கையெழுத்திட்டு, எழுத்து மூலம் உரிய அறிவித்தல் கொடுத்து அடியார்களெவரும் பார்வையிட்டு பரிசோதிக்கும் வண்ணம் களஞ்சியத்தில் வைக்க வேண்டும்.

21. அந்த விவரங்கள் தர்மகர்த்தாக்கள் சபையின் வருடாந்தக் கூட்டங்களுக்கு முன் ஒவ்வொரு வருடமும் சரிபார்த்து, தேவையேற்படின் மாற்றங்கள் செய்து கொள்ள வேண்டும்.

22. கோவிலுக்குச் சொந்தமான எல்லாக் கணக்குப் புத்தகங்கள், ஏனைய தஸ்தாவேஜுகள், உறுதிகள், நகைகள், ஏனைய பெறுமதி வாய்ந்த பொருள்கள் யாவும் கோவிலில் பாதுகாப்பாக வைப்பதோடு, அவைகளின் பாதுகாப்பிற்கு தர்மகர்த்தாக்கள் சபையே பொறுப்பாகவும் இருக்கும்.

23. கூட்டங்களுக்கு சமூகமளிக்காமைக்கான, சபையின் அனுமதியை பெறாமல், தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களில் அங்கத்தவர் எவரேனும் பங்குபற்றத் தவறும் பட்சத்தில் அவர் தர்மகர்த்தா என்ற பதவியிலிருந்து தாமாகவே விலகிக் கொண்டதாகக் கருதப்படுவர்.

24. முன்பு கூறப்பட்டதுபோல, தாமாகவே விலகுதல், பதவி வேண்டாமென்று விலகுதல், சாவு ஆகியவற்றால், தர்மகர்த்தாக்கள் சபையில் ஏற்படும் காலி ஸ்தானத்தை, அந்த ஐந்து வருட காலத்தில் எஞ்சியுள்ள காலத்திற்கு பதவி வகிக்கும் வண்ணம், ஒரு தர்மகர்த்தாவை நியமித்து நிரப்புவதற்கு, தர்மகர்த்தாக்கள் சபையின் ஏனைய அங்கத்தவர்களுக்கு அதிகாரமுண்டு.

25. மூன்று வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு, கோவிலுக்குச் சொந்தமான ஏதாவது அசைவற்ற சொத்தை, சபை குத்தகைக்கு விடுவதைத் தவிர, எந்தச் சூழ்நிலையிலும், அசைவற்ற, அசைவுள்ள சொத்தை பரிமாற்றஞ் செய்யவோ, பாராதீனப்படுத்தவோ கூடாது.

26. தேர்தல் டாப்பு சரிவரப் பேணப்படுவதோடு, புதிய தர்மகர்த்தாக்களைத் தெரிவு செய்யும் நோக்குடன், ஐந்தாண்டு காலம் முடிவதற்கு ஒரு மாதத்தின் முன், தேர்தல் டாப்பில் உள்ள அங்கத்தவர்களுக்கு அறிவித்தல்களை அனுப்பி கூட்டத்தைக் கூட்டுவது தர்மகர்த்தாக்கள் சபையின் கடமையாகும்.

27. அக்கூட்டத்தின் அறிவித்தல்கள் கோவிலில் இடம்பெறச் செய்வதோடு, கூட்டத்தேதிக்கு குறைந்த பட்சம் ஒரு வாரத்திற்கு முன் தபால் அட்டையில் அறிவித்தல்கள் தேர்தல் டாப்பில் உள்ள ஒவ்வொருவருக்கும் அனுப்ப வேண்டும்.

28. திட்டத்தில் பரம்பரை பூசகர்களுக்கான வேதனம் நிர்ணயிக்கப்பட்டதற்கமைய, அவர்கள் அர்ச்சனை, தட்சணை, அரிசி தானியங்கள், பழம், காவடி ஆகியவற்றின் கொடுப்பனவுகளை, நாளாந்தம் மூன்று பூசைகளுக்கான பொருட்களை தாமே கொடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைக்கமைய அனுபவிக்கலாம்.

29. வேதனத்திற்கான இவ்வொழுங்கையும், அவர்கள் வேதனமாகப் பெறும் தொகையையும், பத்து வருட முடிவில், பிராமண பூசகரின் மனுவின்

பேரிலோ அல்லது அப்போது இயங்கும் தர்மகர்த்தாக்கள் சபை மனுவின் பேரிலோ, மறு பரிசீலனை செய்யலாம்.

30. "தர்மகர்த்தாக்கள் சபை" எனப்படுவது இடைக்கால தர்மகர்த்தாக்கள் சபையையும், அது செயற்படுமளவிற்கு கொண்டுள்ளதாக கருதும்.

ஒப்பம் **R.R.**செல்லத்துரை,
மாவட்ட நீதிபதி.

**14-6-1948.** **D.C. T.R.74/A.**

# TRIAL

Mr. Adv.Kanaganayam with Mr.Adv.Vanniasingham in structed by Mr.S.Cumarasuriar for the plffs.

Mr.Eliathamby for the 2nd deft.
Mr.Navaratnarajah for the 3rd and 4th defts.
Mr.Adv.Kulssingham instructed by Mr.S.T.Nadarajah for the 5th,6th and 8th defts.

Case settled All. parties in this action agree to the terms of settlement to be entered herein-after. It is also agreed that Somasundara Kurukkal Kanapathy Iyer, Somasundara Kurukkal Vairavanatha Kurukkal, Somasundara Kurukkal Sanmugasundara Iyer and Somasundara Kurukkal Thiagarajah Iyer be added as defts. and their consent be obtained for these terms. In the event, however, of the abovementioned four persons or any one of them declines to consent to the said terms any rights granted to such persons by this decree are to be null and void and of no effect. The terms of settlement are that decree be entered declaring the Kumbalavalai Pillaiyar Temple standing on the land called Kumbalavalai, which according to the 3rd deft. is also called and known as Kumbalavalaipathi and other parcels, and the tem-

poralities of the said temple are a Hindu public religious trust in terms of the Trusts Ordinance No.9 of 1917; the sons of Manickavasaga Iyer Somasundara Kurukkal by his wife Nagammah, daughter of Ramalingam Iyer Suppiar viz. the 5th and the 6th defts in this case and the abovementioned four persons viz. Somasundara Kurukkal Kanapathy Iyer, Somasundara Kurukkal Vairavanatha Kurukkal, Somasundara Kurukkal Sanmugasundara Iyer and Somasundara Kurukkal Thiagarajah Iyer are declared entitled to be hereditary officialting Brahmin priests of this temple and to officiate as such; it is further declared that donors of lands to the temple or the deity thereof during their life time and after their life time such of their male descendants as are worshippers at the said temple, and other worshippers designated Upayakarars as hereinafter defined on payment of an annual subscription of Rs.2/-per head shall constitute and be entitled to have their names on the electoral roll for the purpose of electing trustees; that the following three persons do constitute an interim board of trustees viz. Kasipillai Thamotharampillai, Visuvanathar Nagarajah and Ramupillai Murugesu all of Alaveddy and shall immediately take charge of and possess the temple and its movable and immovable properties until the election of a board of trustees in October, 1948; it shall be their duty to draw up the electoral roll consisting of the persons metioned above and post up such roll at a prominent place in the precincts of the temple and to summon a meeting of those whose names appear on the electoral roll for the purpose of electing trustees in October,1948, the worshippers at this temple who annually conduct the high festivals, special poojahs and other festival of special and religious significance shall be the Uppayakarars of this temple; the board of trustees shall consist of seven persons elected by persons whose names appear on the electoral roll and shall hold office for a period of five years and shall possess, manage and control the temple and temporalities subject to the scheme of management set out hereinafter. A trustee shall be eligible for reelection for two further periods of fiveyears only. The 2nd deft. shall be entitled to possess and cultivate the land called Siththiravayal in extent 16 ladchams. P.C. situated at Alaveddy and belonging to the temple during his life time. He shall pay and deliver to the board of trustees or to such other person as may be nominated by them to receive, six measures of paddy annually in the month of April

commencing from April, 1949. This right shall be inalienable and will not pass to any of his heirs or successors; subject to above, the temple and all its properties movable and immovableshall vest in the interim board of trustees till the board of seven persons is elected in October, 1948,and thereafter in the successive boards or trustees as may be elected once in five years. It is further decreed that the affairs of this temple shall be managed according to the scheme of management set out herein below. There will be no costs of this action.

Sgd.
District Judge.
14-6-48.

## SCHEME OF MANAGEMENT AS AGREED UPON.

The interim board of trustees shall be in possession of the temple and its temporalities movable and immovable from this date and shall control and manage the affairs of the temple and collect all income save and except the income that the Brahmin priests are entitled to according to usage and custom prevailing in this templeviz. arichanai, abhishekam, thedchanai,offerings of rice and grains and fruits and collections from kaavadi, till the election of a new board of trustees in October, 1948, and meet all expendit ure save and except the expenses incurred in the performance of poojahs and other rites and ceremonies within the temple. It shall be the duty of the interim board to perpare the electoral roll as set out in the decree and to summon a meeting of the electors by giving notices of not less than a week by posting up on a notice board at the temple and also by posting post cards to each of the electors.

The board of trustees elected by a majority vote at such meeting shall assume office immediately after election and shall hold office for a period of five years. It shall be their duty to collect all incomes and meet all expenses other than the income that the hereditary Brahmin priests are entitled to according to usage and custom as afforesaid.

The board of trustees may elect annualy among themselves a President, a Secretary and a Treasurer. The Secretary shall be in charge of all correspondance, minutes of meetings of the board, general and special meetings of the electors, documents, deeds etc. The treasurer shall be in charge of all income, offerings, collections,donations and monies and items of expenditure etc. except such income as have been reserved for the benefit of the custom as afforesaid.

It shall be duty of the board of trustees (and of the interim board till they cease to function) to keep and maintain through the treasurer a proper set of account books and to have the accounts audited annually and to post up on notice board in precincts of the temple a true copy of the audited accounts.

No remuneration shall be paid to any of the members of the board of trustees except for bona fide travelling expenses incurred for any work for the benefit of the said temple.

The board of trustees shall meet at least once a month after three days' notice which shall be given by the secretary. Any member of the board of trustees is entitled to convene a meeting of the board after requesting the secretary to give due notice of such a meeting in writing atleast five days before such meeting.

The board of trustees shall collectively and individually attend to all matters of the said temple and shall have a personal supervision of the conduct of all proceeding of the said temple on all important occasions.

The heriditary priests shall perform the poojahs and other priestly ceremonies of the temple under the directions of the trustees. They shall maintain the custom and traditions of this temple by the performance of at least three poojahs a day, themselves providing the necessary provisions for same.

In the event of the conduct of a hereditray priest being found unsatisfactory, the trustees shall make application to court to have him removed.

The trustees shall open an account in a bank functioning at jaffna in the name of the Kumbalavalai Pillaiyar Temple and shall deposit all incomes, donations ect. received or collected by the board of trustees provided howver the board of trustees may retain in their hands through the treasurer a sum not exceeding rupees hundred at any one time for the purpose of meeting ordinary current and necessary expenses. Monies so deposited in the bank may be drawn by the board of trustees for any expense decided upon by them by drawing cheques which shall be sighned by the President and Treasurer,or in the absence or incapacity of the president by any other member of the board of trustees and the Treasurer. In the absence or incapacity of the treasurer by the president and the Secretary.

The Board of Trustees may, in their discretion keep one or more undial boxes in the temple premises duly secured and open the same once a month in the presence of atleast three members of the board of trustees and deposit the amount contained therein in the bank.

A true and correct inventory of all lands belonging to the said temple with proper extents situations and boundaries and of all movables temporalities shall be prepared and duly signed by the board of trustees and kept in the kalanchium of the said twmple and shall be open for inspection by the members of the congregation on proper notice being given to the board of trustees in writing. Such inventory shall be verified and aminded, if necessary, at the end of each and every year prior to the annual meeting of the board of trustees.

All account books and other documents, deeds and jewels and other valuables belonging to the temple shall be kept securely in the temple premises and the board of trustees shall be responsible foe their safety.

In the event of any trustee failing to attend three successive meeting of the board without obtaining leave ofabsence from the board, he shall be deemed to have vacated his office of trustee. When a vacancy occurs in the board of trustees by death or resignation or by vacating his office as afforesaid the other members of the board of trustees shall have power to nominate and appoint a trustee to fill the vacancy for the unexpired portion of the five years. The board of trustees shall under no circumstances alienate or encumber any of the movable or immovable see original of the temple for a period not exceeding three years.

It shall be the duty of the board of trustees to see that the electoral is properly maintained and to summon a meeting of the persons on the electoral roll a month before the expiry of their term of five years for the purpose of electing new trustees. Notice of such meeting shall be posted up at the temple premises and post cards posted to those on the electoral roll at least a week before the date of the meeting. It has been provided in the scheme for the renuneration of the hereditary priests that they do enjoy all payments in respect of the arichanai, abhishekam, thedchanai, offerings of the rice and grains and fruits and collections from kaavadies subject to their providing their articles necessary for the performance of three poojahs a day. This mode of remuneration and the amount received by them as remuneration may be reviewed at the expiry of a period of ten years on the application of the Brahmin priests themselves or on the application of the then board of trustees.

The term "Board of Trustees" means and includes the interim board of trustees so far as the same is applicable.

**sgd.**
**District Judge.**
**14-6-1948.**

# வாகனங்கள் விபரம்

| வாகனம் | உபகரித்தவர் |
|---|---|
| 1. பெரியயானை வாகனம் | தெரியாது |
| 2. யானை வாகனம் | சின்னத்தம்பிபொன்னையாசகோதரர்கள் அளவெட்டி |
| 3. பெரியகுதிரை வாகனம் | குமாரு நன்னியர் (சுறுக்கன் அப்பா) |
| 4. காராம்பசு வாகனம் புதியது | சேதுப்பிள்ளை அளவெட்டி |
| 5. மயில் வாகனம் | செல்லையா, முள்ளானை |
| 6. இடப வாகனம் | செல்லம்மா, முள்ளானை |
| 7. சோடிக்குதிரை வாகனம் | சின்னத்தம்பர் கந்தையா அழகொல்லை, அளவெட்டி |
| 8. சோடிக்குதிரை வாகனம் | சுப்பிரமணியம் மகேந்திரராசா, அளவெட்டி |
| 9. எலி வாகனம் | நடேசு, அளவெட்டி |
| 10. எலி வாகனம் | செல்லையா, முள்ளானை |
| 11. எலி வாகனம் | தர்மகர்த்தாக்கள் சபை |
| 12. சிங்க வாகனம் | சோ.சிவப்பிரகாசம் அளவெட்டி |
| 13. கேடகம் வாகனம் | சுறுக்கன் அப்பாவினால் பொதுமக்களிடம் பணம் சேகரித்து செய்யப்பட்டது. |
| 14. கேடகம் வாகனம் | சுப்பையா அன்னம் அளவெட்டி |
| 15. கேடகம் வாகனம் | தெரியாது |
| 16. சூரன் வாகனம் பழையது | வயிரமுத்து இராசதுங்கம் அளவெட்டி |
| 17. சூரன் வாகனம் | டாக்டர்.தெய்வேந்திரன்M.O.H தெல்லிப்பழை.அளவெட்டி |
| 18. இடும்ப வாகனம் | நாகமுத்து பொன்னையா முருக்கடி, அளவெட்டி. |
| 19. சிம்மாசனம் வாகனம் நாலுமூலையிலும் சிங்கம்பூட்டியது | கதிர்காமசிங்கம், அளவெட்டி |
| 20. ஊஞ்சல் | இளையதம்பி சுப்பிரமணியம் கிளாங்குடை, அளவெட்டி |
| 21. ஊஞ்சல் (கேடகம்) | K.S.கந்தையா, அளவெட்டி. |
| 22. சகடை பழையது (வெளிவீதி) | தம்பர் சபாபதிப்பிள்ளை அளவெட்டி. |
| 23. சகடை புதியது (வெளிவீதி) | வைத்தியலிங்கம் இராசகோபால், அளவெட்டி |

| | |
|---|---|
| 24. சகடை சிறியது | தம்பிமுத்து அடைவுகடை, அளவெட்டி. |
| 25. சப்பறம் | முத்தர் சின்னத்தம்பி அளகொல்லை, அளவெட்டி. |
| 26. தேர்-விநாயகர் | இராமர் வேதாரணியர், அளவெட்டி. |
| 27. தேர்-முருகன் | சபாபதி செல்லமுத்து ஆசாரி அளவெட்டி |
| 28. தேர்-சிவன் அம்மன் | நன்னியர் வயிரமுத்து |
| 29. யாகம் | கோவில் தர்மகர்த்தாக்கள் சபை,அளவெட்டி |
| 30. சந்திரவட்டக்குடை | வி.சீனிவாசகம், அளவெட்டி வடக்கு |
| 31. சந்திர வட்டக்குடை | செ.குணரத்தினம்,அளவெட்டி தெற்கு |
| 32. கற்பகிருக மண்டபவாசல் திருவாசி | சத்தியபாமா கணேசையா,அளவெட்டி |
| 33. பஞ்சமுக விநாயகர் கிரீடம் | உ.சுசீலா, அளவெட்டி |
| 34. வெள்ளி சேவல் கொடி | ச.அப்பாத்துரை,அளவெட்டி |
| 35. வாகன மாலை மகரதோரணம் | இராசையா நாகம்மா, அளவெட்டி |
| 36. கற்பக் கிரக வாசல் திருவாசி | ஆ.லவேந்திரன், அளவெட்டி |
| 37. ஓமகுண்டம் பித்தளைத்தகடு | ஆ.லவேந்திரன், அளவெட்டி |
| 38. எழுந்தருளி முடி | சி.பொன்னுத்துரை,அளவெட்டி |
| 39. சிறிய பிள்ளையார் திருவாசி | ச.உருத்திரபசுதிபதி,அளவெட்டி |
| 40. சண்முகர் விக்கிரகம் | இ.கந்தையா வெள்ளையம்பதி,அளவெட்டி |
| 41. சிவன் அம்பாள் வெள்ளிக்கிரீடம் | ச.நாகநாதர்,அளவெட்டி |
| 42. திருவாசிவேல் கொடி | இ.கந்தையா வெள்ளையம்பதி,அளவெட்டி |
| 43. திரைச்சீலை | சி.செல்வநாயகம்,அளவெட்டி |
| 44. மூலஸ்தானயந்திர தகட்டுக்கு | சுகுணன் சிவாஜினி, அளவெட்டி. |



உ

சிவமயம்

# அளவெட்டி - கும்பழாவளை ஸ்ரீ விநாயகப் பெருமான்



## திருப்பள்ளியெழுச்சி

போற்றியெம் மாதவம் பூத்தமெய்ப் பொருளே
புகன்றிடு நான்மறை வழுத்திடு முதல்வா
சாற்றிடு செங்கதிர்த் தபனனு மெழுந்தான்
தாரகை மழுங்கின தண்ணடி தொழுவார்
ஏற்றிய சிந்தனை யூற்றெழுந் தணைந்தார்
எழில்மிகு கும்பழா வளைக் கண பதியே
ஆற்றிடு நின்னரு ணிதியுல குவப்ப
ஐங்கர னேபள்ளி யெழுந்தரு ளாயே. 1.

கண்ணகல் ஞாலங் கவலைக ளொழிந்திட
கதியொரு நான்கின் திறநலம் தெளிந்திட
விண்ணவர்க் கரிதாம் வேதநூல் வரைந்திட
வெண்மருப் பொன்றினைக் கைத்தலம் ஏந்திய
புண்ணியப் பரவை பொழிமதக் களிறே
பூதலக் கும்பழா வளைக்கண பதியே
எண்ணுதற் கரியாய் இறைஞ்சினர்க் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 2.

நாதமும் விந்துவும் கலைகளும் கலைசேர்
ஞாயிறும் மதியமும் தேயுவும் பயின்ற

பூதமும் புவனங்க ளனைத்தும் சராசரப்
பொலிவும் படைத்திடும் பூரணி மகனே
வேதமும் ஆகம விளைவும் செழித்து
விளங்கிடும் கும்பழா வளைக்கண பதியே
ஆதவ னாகியெம் அகத்தினில் நிறைந்த
அருளழ காபள்ளி யெழுந்தரு ளாயே. 3.

வீணையும் குழலும் விண்முக டெழுந்தன
மிகுதுடி முழவம் மத்தள முழங்கின
மாணுறு வானவர் மறைநான் கோதினர்
வளர்பண் ணிசைமுறை வழுத்தினர் அடியார்
சேணுயர் கோபுரம் வாவிகண் மலரும்
சீருறு கும்பழா வளைக்கண பதியே
காணரும் வண்ணக் கருவுருப் பிரவணக்
கஜவத னாபள்ளி எழுந்தருளாயே. 4.

பொன்னுரை மேனியும் முடித்தசெஞ் சடையும்
புனைதரு மகுடமும் பாசாங் குசமும்
முன்றுதிக் கரமும் முந்நூல் மார்பும்
முக்கண் மிளிரும் இலட்சண முகமும்
இன்புறக் காட்டி எமைக்காப் பவனே
இதந்தரு கும்பழா வளைக்கண பதியே
அன்பினில் விளைந்த ஆனந்த மலையே
ஆரமுதே பள்ளி யெழுந்தரு ளாயே. 5.

இருவினை இருளால் இடருழன் றேக்குறும்
எண்ணரும் பிறவித் தளையறுத் தடியார்
குருநெறி பிடித்துக் குணமலை யேறிக்
குளிர்ந்தமா மனையிற் குடிபுகச் செய்யும்
திருமகள் மருகா சிவன்தேர் இறுத்த
சேயே கும்பழா வளைக் கணபதியே
மருவிநின் றகலா மனமணி விளக்கே
மகேஸ்வர னேபள்ளி யெழுந்தரு ளாயே. 6.

மாவையூர் முருகனின் வரம்பெறு வனிதையாம்
மாருத வல்லியின் மாமுக நோய்தனை
மாவிழி திட்டிமுன் வந்துநின் றகற்றி
மாலுமை சிவன்குகன் வைரவர் சூழ்தர
ஓவியக் கோயிலில் காவியக் கருவாய்
உறைந்திடும் கும்பழா வளைக்கண பதியே
தேவிவல் லபைக்கொரு நாயகனாகிய
சிற்பர னேபள்ளி யெழுந்தருளாயோ. 7.

தென்னையிற் பைங்காய் செங்காயகச்
செய்துநின் பூசகர் மனங்குளிர் வித்தனை
மன்னிய மயில்வா கனத்தொடு கருத்து
மருவுபல் தொண்டரும் பணிசெய நயந்து
பொன்னெடுங் கோபுரக் கோயிலமர்ந்த
பூம்பொழில் கும்பழா வளைக்கண பதியே
அன்னையு மப்பனும் அழைத்தவி நாயக
அதிபதி யேபள்ளி யெழுந்தருளாயே. 8.

பக்தியிற் பெருகிய முக்கனிச் சுவையே
பரவெளி கடந்த பரிதியே மேலாம்
முத்தியின் வித்தே மூலா தரனே
மூஷிக வாகனா முறையிடு மடியவர்
புத்தியி லுறைதரு புனிதா நமக்கருள்
புரிந்திடும் கும்பழா வளைக்கண பதியே
நித்திய முனையே நினைந்தழைக் கின்றோம்
நிருமலனே பள்ளியெழுந்தரு ளாயே. 9.

செல்வக் கணேசனே நின்வழித் தொண்டரின்
சென்மக் கணக்கழித் தெழுதுவை யதனால்
சொல்வளர் பிரமனும் கூற்றனும் கோள்களும்
தொழுதுநின் வரவெதிர் பார்த்துநிற் கின்றனர்
வல்வினை யணுகா மலரடிக் கீர்க்கும்
வரதனே கும்பழா வளைக்கண பதியே
கல்வியும் நிதியமும் நிறைவும் சுரக்கும்
கற்பகமே பள்ளி யெழுந்தருளாயே. 10.

ஐந்தெழுத் துடனே அணிநீ றிலங்க
நந்தியின் மணியும் சுருதியும் துலங்க
தந்திரச் சைவ வரன்முறை ஓங்க
சந்ததம் மாரியால் தருவளம் தேங்க
சிந்தனைத் திருமுறைச் சிவமணங் கமழும்
மந்திரக் கும்பழா வளைக்கண பதியே
செந்தமிழ் சிறக்கத் திருவருள் சொரியும்
சுந்தரனே பள்ளி யெழுந்தருளாயே. 11.

அளவெட்டி அருட்கவி சீ.விநாசித்தம்பி

உ
சிவமயம்

# கும்பழாவளை விநாயகர் தோத்திர மாலை

பூமாது வாழ் கும்பழாவளை மேவிய புங்கவறின்
பாமேவு தோத்திர மாலைக் கலித்துறை பாடியுய்யக்
கோமானு தற்கட் பெருமானிடப்புறங் கொண்டுவைகும்
மாமாரி தந்த மதகரிமாமுக வந்தருளே.

## நூல்

1. அந்திப் பிறை யணிந்தோனருளால் வந்தவதரித்து
தொந்திப் பெருவயிற்றைந்துகரா வுன்னைத் தோத்தரித்தேன்
கந்தொத்த தோளுடைக் காலன் வருகையிற் காவுமையா
நந்துற்ற சோலை செறி கும்பழாவளை நாயகமே.

2. ஆராத நின்மலர்ப் பாதார விந்த மடைந்தெனது
தீராத பாவச் செனனத் தொடர்வினை தீர்க்க வெண்ணி
பேராமலுன்பதம் பேணிப் பணியப் பெறுகிற்றிலேன்
தாராய் உன்னருள் கும்பழாவளை நிர்மலனே.

3. பாவச் செனனப் பரவையிற் சேரும் பழவினையின்
சோபத்தை நீக்கித் துணைசெய்ய வாவென்றுயரகற்றி
தீபச் செழுஞ்சுடர் போலெங்கு மேவிய தேசிகனே
ஆபத்தை நீக்கி யருள் கும்பழாவளை யைங்கரனே.

4. பண்டேபுரிந்த பழவினையின் றெடர்பற்றறுக்க
வுண்டோ மருந்தினியுன்னை யல்லாலங்குமை சினத்தா
விண்டே பெறுகின்ற சாபத்தை நீங்கிய மெய்ப்பொருளே
தண்டேன்றுளி கும்பழாவளை மேவிய தற்பரனே.

## கும்பழாவளை விநாயகர் தோத்திரமாலை

"வஞ்சனை பொய்கள் வளர்ந்து வருத்துமிவ் வையகத்தில்
விஞ்சுங் களவுகட் காம நெருங்கி விதனிப்பதால்
அஞ்சலென் றாற்ற வொருதுணை நீயுன் னடைக்கலம் நான்
கஞ்ச மலர்ச்சுனை சேர்க்கும்ப ழாவளைக் காரணனே."

பாக்கியமான நின் சந்நிதி வாசலிற் பன்முறையும்
நீக்கமில் லாவன்பு பின்னின்று நோக்க நின்னீள் பதத்தை
ஆக்கமென் றெண்ணி யநுதினம் போற்ற வருள் செய்குவாய்
பூக்கமழ் சோலை செறிகும்ப ழாவளைப் புங்கவனே.

பண்டேபுரிந்த பழவினை யின்றொடர்ப் பற்றறுக்க
வுண்டோ மருந்தினி யுன்னையல் லாலங்குமை சினத்தால்
விண்டேவ் பெறுகின்ற சாபத்தை நீக்கிய மெய்ப்பொருளே
தண்டேன் றுளிகும்பழாவளை மேவிய தற்பரனே.

மாசற்ற வுன்னருட் சந்நிதி வாசலில் வந்தடைந்தால்
தூசுற்ற பாவந் தொலைந்திடு மேயினித் தோற்றியென்முன்
நீசற் றிரக்கம் புரிதி கண் டாயருணின் மலனே
தேசுற்ற சோலை செறிகும்பழாவளைத் தேசிகனே.

நெஞ்சம் மறந்து நிலை தளர்ந்தாலும் நெறியகன்று
வஞ்சம் பொருந்து வெம் பேய்பூதந் தாக்க மயக்குறினும்
விஞ்சுந் துயரொடு மற்றுல காசைகள் மேற்படினும்
அஞ்சலென் றென் முன்னிற் பாய் கும்பழாவளை ஐங்கரனே.

ஐம்புல வேடுவ ரங்கிங்கு வாவென வாட்டி நிற்பர்
ஐம்படை வேடனும் ஆய்மலர் தாங்கி அடருவனால்
இம்பரில் நோய்பசி தாகமும் வாட்டு மிவைக் கஞ்சினேன்
உம்பர்கள் போற்று முயர் கும்பழாவளை யுத்தமனே.

சைவந் தழைக்கச் சமயங்கள் வாழத் தவமுனிவர்
செய்யுந் தபசு பெருக நற் புண்ணியந் தேங்கி மிகப்
பொய்யும் புலையு முதலான பாவங்கள் போயகல
வையெம் பரமனருள் கும்பழா வளை வான் பொருளே.

உ
கணபதி துணை

# அளவைக் கும்பழாவளை விநாயகரூஞ்சல்

## காப்பு

பூமருவு பொன்னகரம் பொருவு மென்னாப்
புலவர்புக ழளவைநகர் புரக்கு மண்ணல்
தேமருவு மலரிதழித் தொடையல் வேய்ந்த
செஞ்சடையைங் கரப்பெருமான் சீரூஞ்சற்கு
நாமவுரு சொற்சிறப்பும் பொருளின் வாய்ப்பும்
நலம்பலவுந்தந்துதவு நால்வாய் முக்கட்
டேமருவு தும்பிமுக நம்பி யும்பர்
தொழுதுதின முருகுபதந் துணைகடாமே

## நூல்

மறைநான்கு மொருநான்கு வடங்களாக
வாய்ந்த சிவா கமம்பலகை மாண்புதோற்ற
வறைநான்கு மறைக்குமுத லாகிநின்ற
வக்கரமே விதானமென வமைந்து காட்ட
நிறைநான்கு மறையொடுமா கமம்வெவ்வேறா
நிகழ்த்துபொருளனைத்துமொரு நெறிப்பட்டாங்கு
முறை நான்கு புயமுதல்வ ராடீரூஞ்சல்
முத்தமிழ்க்கும் பழாவளை யீராடீரூஞ்சல்

பத்திநெறி யெனப்படுமவ் விட்டந் தொட்டுப்
பரவியநாற் கரணவடம் பயிலப் பூட்டி
நித்தியசித் துயிர்ப்பலகை நேரக் கோத்து
நெடிதியற்று தவம்பலவு நின்று நூக்க
வத்தகைய சத்துவவெண் முத்தந் தூக்கி
யமைக்குமணி யூசல்விளையாட்டு கந்தீர்
மத்தமத மாமுகத்தீராடீ ரூஞ்சல்
வளர்பொழிற்கும் பழாவளையீ ராடீரூஞ்சல்

எங்குநீர் கலந்திருப்பீ ரென்று மென்று
மெவ்வுயிர்க்கு முயிராகி யிருப்பீ ரென்றுஞ்
சங்கையற மறையுரைக்குஞ் சரத வாக்குத்
தலைவர் நீர் கண்டறிதறான் வேண்டவோ
மங்குல்புவி யுலகுயிர்க ளனைத்து மொவ்வோர்
மாத்திரையுட் காட்டுமணி யூஞ்சலேறி
நங்கள் மனக் குறைதவிர்ப்பீ ராடீரூஞ்சல்
நளிமதிற்கும் பழாவளையீ ராடீரூஞ்சல்.

அம்பரமா நாட்டகத்து நாகநாட்டு
மகனிலத்துஞ் சென்றாட வாக்கை யென்னும்
பம்பரத்து ளிருத்திநமைப் பல்கா லாட்டும்
பாங்குடையீர்மணியூசல் பயில வேறி
யும்பர்பதி முதற்பதிதொ றொழியா தாட
வும்மையுமாட்டுவதுநமக் குரிமை யன்றோ
நம்பரசிவகுமர ராடீரூஞ்சல்
நறும்பொழிற்கும் பழாவளையீ ராடீரூஞ்சல்

இரவுபகல் நுமைவழுத்து மெய்பொ ருட்டா
லிங்ஙனநீர் நெடிதிருந்தா லிருவி சும்போ
ரரவநக ருறையுமவ ரழுங்கு றாரோ
வவர் புரிபூசனைநோக்கு மதுவேண்டவோ
விரவுமணி யூசலிது விண்ணுமண்ணும்
மேதகுபா தலமுமிகுவிரைவி னோடும்
பரவுமவர் பவந்துடைப்பீ ராடீரூஞ்சல்
பைம்பொழிற்கும் பழாவளையீ ராடீரூஞ்சல்

திருமருப்போ டொன்றியநின் செய்யமேனி
சீருஞ்ச லாடுறுமத் திசைக டோறு
முருவளையுஞ் சிறுபிறையோ டொன்றுஞ் செக்க
ரொவ்வொருகா லுறுவதிறும் பூதென் றுன்னி
யிருநிலமுந் திருவிசும்புமெவையு நோக்க
வெழுங்குயிலா லரமகளி ரிருஞ்சூ ரீன்ற
திருமதலை யமர்நினைவிற் றிருகவிண்போய்ச்
செறிபொழிற்கும் பழாவளையீ ராடீரூஞ்சல்

சிறுபிறைவெண் கங்கைவிழச் செறிந்த நாகஞ்
சீறியெழச் சடைக்கற்றை சென்னி யாடக்
குறுநகையி னெழுநிலவு கொண்டர் நாட்டக்
குவளைமலர் முகிழ்விரிப்பக் குறுகியாட
நறுமலர்பொற் றொடையாட நாற்புயத்து
நான்றமுறச் செவியாட நள்ளாருட்கச்
சிறுகரத்தி னேந்துதிருத் தந்தமாடத்
திருவிழைகும் பழாவளையீ ராடீரூஞ்சல்.

விரிமுகமா நிலம்புரக்கும் வேந்தர் கோமான்
விறல்வளவன் மடப்பாவை வேண்டுகோளாற்
பரிமுகம்போக் குறுமாட்சி படைத்துக் கொண்டீர்
பனிமதிக்கும் பலர்க்குநகை படிவ தோர்ந்துங்
கிரிமுகங்காட் டியபுயலிற் கெழுமுந் தோற்றக்
கீசகவெண் முளைபொருவக்கிளர்ந்த கோட்டுக்
கரிமுகம்போக் குறவறியீ ராடீரூஞ்சல்
காவளைகும் பழாவளையீ ராடீரூஞ்சல்.

மலைமகளு மரனுமொரு வடந்தொட்டாட்ட
மலர்மகளு மாலுமொரு வடந்தொட்டாட்டக்
கலைமகளு மயனுமொரு வடந்தொட்டாட்டக்
காமருநும் மடியரொரு வடந்தொட்டாட்டக்
குலைமருவு தெங்கமர ரமுதவூணிற்
குலைமருவுநீர்ச் சுவைமிகுதி கொண்டு காட்டு
நிலைமருவு காவெடுத்தோர் நேரவிண்போய்
நீள்பொழிற்கும் பழாவளையீ ராடீரூஞ்சல்

அரம்பொருமங் குசப்படையீ ராடீரூஞ்சல்
அடியேமை யினிப்படையீ ராடீரூஞ்சல்
விரும்பியதொண்டருக்கினியீ ராடீரூஞ்சல்
விரவலர்நெஞ் சுக்கினியீ ராடீரூஞ்சல்
சிரம்படுவெண் கங்கையினீ ராடீரூஞ்சல்
திருமுகத்தி னகங்கையினீ ராடீரூஞ்சல்
நிரம்புபவப் பிணிவளையீ ராடீரூஞ்சல்
நீள்பொழிற்கும் பழாவளையீ ராடீரூஞ்சல்.

## வாழி

வான்மலிமா மழைவாழி மனுநூல் வாழி
மன்னவர்செங் கோல் வாழி வையம் வாழி
நான்மறையா கமவொழுக்க ஞானம் வாழி
நாகரூர் பொருமளவை நகரி வாழி
கூன்மலிவெண் பிறைச்சடையெங் கோமான் சைவக்
குலம்வாழி நலந்தருமான் கூட்டம் வாழி
தேன்மலிபூம் பொழிற்கும்பழாவளைப் பேர்த்
திருப்பதிவாழ் சிவக்களிற்றின் றிருத்தாள் வாழி.

உ

சிவமயம்

# கும்பழாவளை
# ஸ்ரீ சுப்பிரமணியர் திருஊஞ்சல்

சீர்மருவு மீழவளநாட்டு நங்கை
சேர்வதனமென உயர்யாழ்ப்பாணமேய
ஏர்மருவு திலகமெனும் அளவை மன்னும்
எழில் நிறை கும்பழாவளை நற்பதியில் வாழும்
கார்மருவு கரிமுகத் துணைவன் ஆசிகருணைதர
எழுந்தருளும் ஆறுமுகர்க்கு
பேர்மருவு மூஞ்சல் இசைபாடியேத்த
பெருமைசெறி கணபதி பொற்பாதம் காப்பாமே

கந்தவரை தணிகை இருதூண்களாக
கதிர்விடுபொற்பரம் குன்று விட்டமாக
சந்தமுறு நான்மறை நான்வடங்களாக
சார்ந்துவரும் ஆகமநூல் விதானமாக
முந்து சடாட்சரப் பலகை ஏறி எங்கள்
முன்னுறு கும்பழாவளையில் எழுந்தருளி
அந்தம் முதல் அறிவரியீர் ஆடீரூஞ்சல்
அம்மையர்கள் இருவரொடும் ஆடீரூஞ்சல்

அரவணைசேர் அரிஒருபால் வடந்தொட்டாட்ட
அரவணைசேர் அயன் ஒருபால் வடந்தொட்டாட்ட
தருவணையும் அமரரிறை போற்றியேத்த
தவமுனிவர் குழாம் ஆசிதந்துநிற்ப
கருவணையில் எமையாட்டி கருணைதந்து
காவளர் கும்பழாவளையில் எழுந்தருள்வீர்
சரவணைசேர் தருகுமரா ஆடீரூஞ்சல்
தனிமுதல்வ சத்திய ரோடாடீரூஞ்சல்

பிரமமுரு கருக்குரிய பிரணவத்தின் பேணுகின்ற
பொருள்கேட்ட போதிலேங்க
குருமுதலாய் அறியர விலங்குபூட்டி
கூடுசிறையிட எந்தை பணித்தவேளை
தருமமுறை அயன் சிறைவிட்டாண்ட மூர்த்தி
தகுகும்பழாவளையில் எழுந்தருள்வீர்
அருமறையும் அறிவரியீர் ஆடீரூஞ்சல்
அரிவையர்கள் இருவரொடும் ஆடீரூஞ்சல்

சக்தியராய் மகிழ்ந்தமரும் இருவர் தங்கள்
தகமைசெறி இலக்குமிபால் ஸ்கந்தசஷ்டி
மித்திய நல்விரதமனுட்டிக்க ஈந்து
மெல்லியர் தம்நோன்பும் உறுதவமும் கண்டு
பக்தியுடன் இந்திரன் வேல்நம்பிஈய
பகர்கும்பழாவளையில் எழுந்தருள்வீர்
சித்தியுற ஏற்றருள் வீராடீரூஞ்சல்
சிவகுமர சத்திய ரோடாடீரூஞ்சல்

இந்திரனுக் கரசளித்தீர் ஆடீரூஞ்சல்
இமயவர்தம் பதமளித்தீர் ஆடீரூஞ்சல்
பந்தமயல் சூரறுத்தீர் ஆடீரூஞ்சல்
புகுமடியார் பவமறுத்தீர் ஆடீரூஞ்சல்
தந்திமுகர்க் குறுதுணையாய் வினைகள் தீர்த்து
தகுகும்பழாவளையில் அமர்ந்தெஞ்ஞான்றும்
அந்திவண்ணன் தரும் புதல்வா ஆடீரூஞ்சல்
ஆயிளையார் இருவரொடும் ஆடீரூஞ்சல்

தானவர்கோன் வரமளித்தீர் ஆடீரூஞ்சல்
தகுமவர்க்கு வரமளித்தீர் ஆடீரூஞ்சல்
வானவசேனைத் தலைவா ஆடீரூஞ்சல்
வருஞான சத்திதர ஆடீரூஞ்சல்
ஏனல்வளர் புனத்துறைவீர் ஆடீரூஞ்சல்
எழில்மிகு கும்பழாவளையில் அமர்ந்தெஞ்ஞான்றும்
தானவர் மாமகள் கணவா ஆடீரூஞ்சல்
கைம்மலை மெல்லணங்கிறைவா ஆடீரூஞ்சல்

வேதசிவாகமமும் செந்தமிழும் வாழி
வேதியரும் வேந்தன் செங்கோலும் வாழி
காதணி வெண்குழையுடையான் அடியார் வாழி
கார்வாழி ஏர்வாழி வையம் வாழி
மாதர்தரு கற்பினொடு ஆன்கூட்டம் வாழி
வள்ளி தெய்வயானை மணவாளன் வாழி
போகவளம் செறி அளவை நகரம் வாழி
புகர்கும்பழாவளை ஐங்கரன் தாள்கள் வாழி

திருச்சிற்றம்பலம்

## ஒரு பக்தனின் பிரலாபம்

1. ஐம்புலன்கள் அகத் தடக்கும் ஆற்றலிலேன் மூவாசைக்
கொம்பு சுற்றும் பற்று விட்டுக் குவிந்து மனத்திருத்தி
நம்புசுக மோன நிலை நான் தெளிய என் குருவாய்
கும்பழாவளைக் கொம்பா கூர்ந்தருள் செய்வாயே.

2. நெக்கு நெக்கு நின்றுருகி நின்னையே தஞ்சமென
சிக்கனவே கைதொழுது சிந்து கண்ணீர் ததும்பி நின்று
செக்கு மனத்து உனையிருத்தி தெளிந்து கண்டு களித்து
நக்கு நிற்ப தென்று கொலோ ஞானக் கணபதியே.

3. வாயால் உனை வாழ்த்தும் வகையறியேன்
சேயாம் உனையே அறியும் திறனறியேன்
மாயாப் பிறவி அறுக்கவழி காணேன்
நாயாய் எய்த்த லைந்தேன் நம்பினேனுனையே.

4. சரணமென்று உனைச் சார்ந்தனன் நயவஞ்சனேன்
கருணைபுரி யாதிருப்ப தென்கொலோ கணபதியே
அருணதள பாதபத்மம் அளித்து ஏழையேன்
மருளை நீக்கி ஆண்டருள் மாணிக்கமே.

5. ஓங்கார வடிவே உள்ளுவார்க் கருமருந்தே
ஆங்கார மலம் நீக்கி அருள்பெறுவ தென்னாளோ
ரீங்கார வண்டொத்து அருட்றேனிற் றிழைத்தே.
நீங்காதுன் பதம் பெற அருள்வாய் கணபதியே.

6. நிருத்த இன்பம் திளைத்து நின்மலா உனையென்
கருத்தில் இருத்த அறிகிலேன் அறியாது கள்ளப்
புலன்கள் அலைக்க ஆடு கறங்கினைப் போல்
கலங்கிக் கவல்கின்றேன் கும்பழாவளைக் கணபதியே.

7. அருளில்லை எனில் ஆனை முகவா அடி நாயேன் மெய்ப்
பொருளாம் உனைப் போற்றிப் புகழ்ந்து மெய்ப்புளகமெய்தி
பொருந்து மானந்த அருவி நீர் சொரியப் பரமானந்தத்
தொருவி நிற்ப தென்று கொலோ ஆனந்தக் கணபதியே.

8. ஆனந்தமே என் அன்பே ஆள்வாரிலி மாடாயலைந்து
ஊனமிகு முடம்பே மெய்யென்று உள் நிலவு
ஆசையினால் மயக்குண்டு அல்லனவே செய்து நாளும்
போதையினால் மயக்குண்டார் போல் புன்மையே செய்வேனே.

9. புன்மையே செய்யும் என் புந்தியில் நீ புகுந்திருக்கவும்
உன்னையே இடையறாது நினைந்து உருகவும்
நின்மல ஒளியினூடு நின்னடம் கண்டு களிக்கவும்
என்றெனக் கருளுவதையா ஏரம்ப மூர்த்தியே.

10. மணியே மணியின் ஒளியே ஒளிக் கிடமான வெளியே
கனியே கனியின் சுவையே கற்பகமே என் கண்ணே
கண்ணின் மணியே கனக மாமலையே கருதி நின்
பணியே செய்யப் பாலிப்பாய் பாலச் சந்திரனே.

11. வீழ்ந்த மகவை வேதனைப் படாது தாங்குவது
ஆழ்ந்த அன்புத் தாயலவோ பிறவி அல்லலுற்றேன்
தாயும் தந்தையும் தாங்கு சுற்றமும் நீயலவோ
தேயுவின் வடிவே எனை விட்டுடுதியோ கணபதியே.

12. புறத்தே விடின் புவியில் யாருனக்கடி மையாவார்
அறத்தனிச் செல்வி குமரா அடியவர்க் கடியையென்று
சகத்தவர் சொல்லும் சொல் சழக்கதுவாகலாமோ
செகத்தினில் நீயன்றி வேறோர் துணையுன்டோ கணபதியே.

13. ஐம்புலன்கள் அடங்க அறிவு மயங்க அங்கம் சோர
அம்மவோ என்று அகத்தார் நைய ஆவியகலும் அகவை
செம்மனத்தார் தித்திக்கும் செல்வக் கணபதியே உன் நாமம்
மும்மையேனும் ஓத முன்னின்றருள் கணபதியே.

14. சிரமேற் குவித்தகையும் சிந்து கண்ணீர் வெள்ளம்
உரமேற் பொழிய அன்பு கரைந்து என்புள் உருக்க
கரையிலா இன்ப வெள்ளத்துள் கலந்து களித்து நான்
பரவியே நிற்கப் பணிப்பாய் பாலச் சந்திரனே.

15. கல்லா வஞ்ச நெஞ்சக் கடைப்பட்ட நாயேன்
கல்லான மனமும் கசிந்து உருகி நிற்க
எல்லாந்த தூய வெளியினில் இன்பம் துய்க்க
வல்லபை மணாளனே வரமெனக்கருள்வாய்.

16. ஆராத அன்பு கொண்டுன் ஆனந்த நடங்கண்டு
பேராத கருணை பெற்று என் பிறவி அகல வேண்டும்
தீராத பிறவி உண்டேல் நின் திருப்பாதம் ஒன்றும்
தேராத மனது மறவாமை வேண்டும் தெய்வக் கணபதியே.

17. எல்லாம் உன் செயலாய் இருக்க ஏழையேன் மயலால்
எல்லாம் என்செயல்என்றே இறுமாந்து இம்சைகள்
எல்லாம் நான் நான் என்றே செய்திளைத்தேன் எம் பெருமான்
எல்லாமாய் இருக்கும் ஏரம்பனே எனை யாண்டருளே.

18. தொல்லை தரும் பிறவிச் சுழல் காற்றில் அகப்பட்டு
எல்லையில் காலம் எய்த்திளைத்தேன் எம்பெருமான்
வல்லியர்கள் மாய வலையில் அகப்பட்டு மாள்வேனோ
வல்லபை மணாளனே வந்து முன் நிற்பாயே.

19. பாழும் பிறவி புகுத்திலென் பகரும் பிறவி அறுக்கிலென்
ஆழும் நரகில் அமிழ்த்திலென் அரிய அடிக்கமலம் சேர்ப்பிலென்
சூழும் வெவ்வினை துடைக்கிலென் துன்பம் என்பால் நீக்கிலென்
ஆழும் நின்னருளின்றி அடியனால் ஆவதென் கணபதியே.

20. மையாரும் கண்டன் மைந்தா முருகனுக்கு மூத்தவனே
கையாரும் கொம்பா கும்பழாவழை மேவிய குஞ்சரமே
மையாரும் கேழும் மனையும் புலம்ப மயங்கி நின்ற
பொய்யாரும் புலன்கள் அடங்கும் போ துன்னடைக்கலமே

21. ஐந்து கரமும் ஆனை முகமும் அழகொழுகு கன்னமும்
தொந்தி வயிறும் தொங்கு துதிக்கையும் தூயப்பட்டுந்
பந்தமறுக்கும் பாசாங்குசமும் மோதகமும் முப்புரி நூலும்
செந்தாமரைச் சீறடியும் எப்போது மென் சிந்தையதே.

22. விக்கினன் விநாயகன் விகடன் வரதன் துண்டி தூமகேது
வக்கிர துண்டன் வாமனன் வல்லபை கணேசன் கபிலன்
மிக்க கணநாதன் கஜானன் கணாதிபன் கணாதியட்சகன்
தக்க சுமுகன் ஏகதந்தன் லம்போதரன் எனு நாமத்தோனே.

23. அன்பே அமுதே அமுதின் சுவையே அறிவே அறிவார்
இன்பே தித்திக்கும் தேனே தெவிட்டாத ஞான ஒளியே
துன்பார் பவமறுக்கும் துதிக்கையனே தூயோர் இதயத்து
இன்பாய் மலரும் ஏரம்ப மூர்த்தியே எனையாள்வாய்.

24. உருகும் அடியார் உள்ளக் கமலத்திருப்பாய் என்னைக்
கருதி நாயேனுங் கண்ணீர் ததும்பக் கை கூப்பி நின்றேன்
பெருவயிற்றுப் பிள்ளையே பேயேன் பிறப்பறுத்து நல
அருள்தராய்யெனில் நடுத்தெருவில் நின்றழிவேனே.

25. நாயிற் கடைப் பட்ட நாயேற்குன் நளினமலர் காட்டாய்
பேயிற் திரிந்து பிறவிக்கடல் நீந்தாது கெட்டேன் என்
தாயாய் வந்து தழையறுத்துத் தண்ணருள் தந்து தாங்கி
மாயா மயக்கறுத்து இன்ப வாழ்வு தந்தருளாயே.

26. நிலையில்லா வாழ்வை நிலையென்று நம்பி நெஞ்சே நிதம்
தொலையா வினை செய்து துன்பத்துள் அழுங்குவாயே
மலையாள் மகன் தாள் மறுவில்அன்பால் வணங்காய் கேள்
நிலையாய் ஒரு எண்ணம் நெஞ்சே நீ கொள்ளாயே

27. ஆனந்தக் கனியொன்றுண்டு அதனை அடையப் பெற்றால்
தேனினுமினிது தெவிட்டாது சுவைக்குமது தேசோ மயானந்தமது
கானாமிர்தமது கண்டு களிப்போர்க்கு ஆரா அமுதமது
வானாடரும் காண்பரிது வழுவாது பற்று நெஞ்சே.

28. கள்ளப் புலன்கள் ஐந்தும் கட்டுக்கடங்காமல் பாவப்
பள்ளத்தில் வீழ்த்திப் பரி தவிக்க வைக்குதே அருள்
வெள்ளத்தை அறியாது நாவற்றித் திரிவேனை கருணை
வள்ளற் கணபதியே காத்தருள வாருமையா.

29. எத்தனை எத்தனை பிறவியோ என்னென்ன துன்பமோ
அத்தனையும் நான் பெற்று ஆழ் நரகில் விழலாமோ
எத்தனையும் அரிய நீ ஏழையேற் கிரங்காவிடின்
அத்தா என் செய்கேன் ஆர் துணை யெனக்கினியே.

30. பாடுகின்றிலன் நின் புகழ் பாடிப் பரவுவார் தாள்
சூடுகின்றிலன் தும்பிக்கையனே என்று துதிக்கிலன்
ஆடுகின்றிலன் ஆனந்தப் பரவச அன்பு கொண்டு
தேடுகின்றேன் தேடுகின்றேன் உன் திருவடிகளே.

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும், இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூடிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து,

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்,
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி,
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத் திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே,
இடைப்பிங் கலையின் எழுத்தறி வித்துக்இ
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்

நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்,
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்,
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்,

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்,
கருத்தினிற் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக் கருளி,
என்னை அறிவித்து, எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தேஇ
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி, என்செவியில்

எல்லை இல்லா ஆனந்தம் அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்,
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி,
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்இ
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று.



ஆலயத் தோற்றம்